"அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம்" என்ற முப்பெரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி நடத்தியவர்தான் மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். அந்த தத்துவத்தை, "அமைதி, வளம், வளர்ச்சி" என்று மேலும் மெருகேற்றியவர் மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள். நமது மாபெரும் தலைவர்களின் தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு மாண்புமிகு அம்மாவின் அரசு, இரும்புக் கோட்டையாக எழும்பி கம்பீரமாக நிற்கிறது.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. எடப்பாடி K.**பழனிசாமி** அவர்கள்

©
தமிழ்நாடு அரசு
2020

# தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2020–2021

# செய்தி மற்றும் விளம்பரம்

## மானியக் கோரிக்கை எண்.28

**கடம்பூர் ராஜு**
**செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**

# மானியக் கோரிக்கை எண்: 28
# செய்தி மற்றும் விளம்பரம்
## பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 3 |
| 1 | செய்தி வெளியீட்டுப் பிரிவு | 6 |
| 2 | புகைப்படப் பிரிவு | 15 |
| 3 | மேற்கோள் பிரிவு | 17 |
| 4 | நினைவகங்கள் | 19 |
| 5 | அரசு விழாக்கள் | 33 |
| 6 | கள விளம்பரம் | 48 |
| 7 | விளம்பரம் | 54 |
| 8 | திரைப்பட விருதுகள், சின்னத்திரை விருதுகள் மற்றும் மானியம் | 56 |
| 9 | திரைப்படத்துறையினர் நலவாரியம் | 62 |
| 10 | தமிழ்நாடு திரைப்படப் பிரிவு | 67 |
| 11 | எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் | 73 |
| 12 | திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு | 79 |
| 13 | தமிழரசு | 84 |
| 14 | பொருட்காட்சிப் பிரிவு | 87 |
| 15 | மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் | 92 |
| 16 | சென்னை – மாநிலச் செய்தி நிலையம் | 94 |
| | நிறைவுரை | 97 |

**“கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்துஇவ் வுலகு”**

**– (குறள்–578)**

## முன்னுரை

வள்ளுவப் பெருமானின் வழிகாட்டுதலின்படி, தன் பணி மக்களுக்குத் தொண்டு செய்து வாழ்வதே எனவும், மக்கள் நலன் ஒன்றே எதனினும் முதன்மையானது எனவும் தான் கொண்ட கடமையில் உறுதி வழுவாமை முக்கியம் எனவும் சீரிய கண்ணோட்டங்களை கொண்டு, தமிழக மக்களின் நலனே தம் குறிக்கோளாகவும், தமிழக மக்களின் ஆதரவை தமது உடைமையாகவும் கொண்டு செயல்பட்ட மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி நடக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தலைமையிலான அரசின் திட்டங்களையும், சாதனைகளையும் மக்களிடம் கொண்டு போய் சேர்க்கும் சீரிய பணியை மிகுந்த ஆற்றலுடனும் அளவற்ற உற்சாகத்துடனும் செய்தி மக்கள் தொடர்புத்துறை செயலாற்றுவதோடு மட்டுமல்லாமல் அரசையும், மக்களையும் இணைக்கும் முக்கிய பாலமாக இத்துறை தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

இப்பணிகளை வடிவுடன் மேற்கொண்டு வகையுடன் செயல்படுத்த, செய்தி மக்கள் தொடர்புத்துறை கீழ்க்காணும் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள,

★ செய்தி வெளியீட்டுப் பிரிவு

★ புகைப்படப் பிரிவு

★ மேற்கோள் பிரிவு

★ நினைவகங்கள் பிரிவு

★ விழாக்கள் பிரிவு

★ கள விளம்பரப் பிரிவு

★ விளம்பரப் பிரிவு

★ பொருட்காட்சிப் பிரிவு ஆகிய பிரிவுகளும்

தலைமையிடத்தில் அமைந்துள்ள

★ தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

★ எம்.ஜி.ஆர் அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம்

★ தமிழரசு அலுவலகம் மற்றும் தமிழரசு அச்சகம்

★ திரைப்படத் துறையினர் நல வாரியம்

புதுடெல்லி, சென்னை, மதுரை, தஞ்சாவூர், திருச்சி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள

★ மாநிலச் செய்தி நிலையங்கள்

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அமைந்துள்ள

★ செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

செய்தி மக்கள் தொடர்புத்துறை மேற்காணும் **14**க்கும்

மேற்பட்ட பிரிவுகளை ஒருங்கிணைத்து, வளர்ந்து வரும் விஞ்ஞான எழுச்சியுடன் புதிய தொழில்நுட்ப உத்திகளையும் வழிமுறைகளையும் பின்பற்றி, மிகச் சிறப்புடன் விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களது தலைமையிலான நல்லரசு, தமிழகம் வளம் பெறவும், தமிழரெல்லாம் நலம் பெறவும், தாயுள்ளத்துடன், முன்னோடித் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி, தமிழகம் செழிக்கச் செய்த, மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில், மக்கள் நலப் பணிகளை சிறப்புடன் செயலாற்றி வருகிறது.

அரசு வகுத்து, செயல்படுத்தும் மக்கள் நலத் திட்டங்களின் பயன்கள் அனைத்தும், மக்களுக்கு முழுமையாக சென்றடையவும், மக்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று, அரசின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் வெற்றி காணும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சீரிய பணிகள் மேலும் முனைப்புடன் செயல்பட முடுக்கிவிடப்பட்டு, வெற்றி இலக்கை நோக்கி தொடர்ந்து தொய்வின்றி செயல்பட்டு வருகிறது.

# செய்தி வெளியீட்டுப் பிரிவு

செய்தி மக்கள் தொடர்புத்துறையின், செய்தி வெளியீட்டுப் பிரிவு, துறையின் மிக முக்கியப் பிரிவாக செயலாற்றி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முக்கிய அறிவிப்புகள், செய்திக்குறிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகள் ஆகியவற்றினை பொதுமக்கள் உடனுக்குடன் அறிந்திடும் வகையில் கடமையாற்றுவதே இப்பிரிவின் முக்கியப்பணியாகும். தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள இப்பிரிவு ஓய்வு நாள் ஏதுமின்றி ஆண்டின் அனைத்து நாட்களிலும் 24 மணிநேரமும் செயல்பட்டுவருகிறது.

மேலும், மாண்புமிகு துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்களின் செய்திக்குறிப்புகள், அரசின் செய்தி வெளியீடுகள், அறிவிப்புகள், நலத்திட்டங்களின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றையும், அரசு விழாக்கள் மற்றும் நிகழ்ச்சியின் விவரங்கள், நிகழ்ச்சி குறித்த புகைப்படங்கள், வீடியோ ஒளிப்பதிவுகள் ஆகியவற்றையும் தமிழ் ஆங்கிலம் மற்றும் பிற மாநில நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி முகமைகள், காலமுறை நாளிதழ்கள், இணையதள செய்தி நிறுவனங்கள் என 325க்கும் மேற்பட்ட அச்சு மற்றும் காட்சி ஊடகங்களுக்கு செய்தி வெளியீட்டுப் பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் செய்தியாளர் கூட்டங்கள் நடத்திட தேவையான அனைத்து ஏற்பாடுகள் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர்கள்,

துறைச் செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் பங்கேற்கும் அரசுச் சார்ந்த விழாக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் வருகை தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்கு செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சிப் பிரிவினர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளை வழங்கிடும் வகையில் ஒருங்கிணைப்புப் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் www.tndipr.gov.in வலைதளத்தில் தலைமையிடத்திலிருந்து வெளியிடப்படும் முக்கிய அறிவிப்புகள், செய்தி வெளியீடுகள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பான செய்திகள், காணொலிக்காட்சிப் பதிவுகள், புகைப்படங்கள் அனைத்தும் உடனுக்குடன் அதிவேக முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதேபோன்று, அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் மின்னஞ்சல் மூலம் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்டு மாவட்ட அளவிலும் செய்திகள், புகைப்படங்கள் வெளிவர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாவட்டங்களில் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள் மற்றும் ஏனைய அரசு நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்த செய்திகளும், புகைப்படங்களும் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் வெளியிடுவதோடு அவைகள் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாக சென்னை தலைமையிடத்தில் பெறப்பட்டு, சென்னையிலிருந்து வெளியாகும் நாளிதழ்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சிகள் ஆகியவற்றில்

இடம்பெறச் செய்யும் பணி செய்தி வெளியீட்டுப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**பத்திரிகையாளர் நலன்**

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

நாட்டு நடப்பை விளக்கும் அனைத்துத் தரப்பு செய்திகளையும் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அல்லும் பகலும் அயராது பணியாற்றுகின்ற பத்திரிகையாளர்கள், ஓய்வு பெற்ற பின்னர் மன நிம்மதியுடன் வாழ்க்கை நடத்த ஏதுவாக அரசு சார்பில் மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகள் பணியாற்றி நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2011ஆம் ஆண்டு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த 2011ஆம் ஆண்டிற்குப் பிறகு, 5,000 ரூபாயாக இருந்த பத்திரிகையாளர் ஓய்வூதியமானது, அம்மா அவர்களின் வழிநடக்கும் இந்த அரசால் 4வது முறையாக உயர்த்தப்பட்டு, தற்போது மாதம் 10,000 ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மொத்தம் 218 பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர்கள் அதிக எண்ணிக்கையில் ஓய்வூதியம் பெற்று பயன்பெறும் வகையில் 2018ஆம் ஆண்டு முதல் ஓய்வூதியம் பெறுவதற்கான பணிக்கொடையின் உச்சவரம்பானது, இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாகவும், பணிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் பெற்று வந்த ஆண்டு வருமானத்திற்கான உச்சவரம்பானது

இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து மூன்று இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு உள்ளது.

## குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்கள் மறைவுக்குப் பின்னர், அவர்களின் குடும்பங்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற கடந்த **2011**ஆம் ஆண்டிற்குப் பிறகு, **2,500** ரூபாயாக இருந்த குடும்ப ஓய்வூதியமானது, அம்மா அவர்களின் வழிநடக்கும் இந்த அரசால் **4**வது முறையாக உயர்த்தப்பட்டு, தற்போது மாதம் **5,000** ரூபாயாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மொத்தம் **43** பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு மாதாந்திர குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## குடும்ப உதவி நிதி

பத்திரிகைத் துறையில் ஆசிரியர், உதவி ஆசிரியர், நிருபர், புகைப்படக்காரர் மற்றும் பிழை திருத்துவோர் ஆகியோர் பணிக்காலத்தில் இயற்கை எய்தும் நேரத்தில், அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் குடும்ப உதவி நிதி **30.7.2018** முதல் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

| பணிபுரிந்த ஆண்டுகள் | குடும்ப உதவி நிதித் தொகை |
|---|---|
| 5 | ரூ. 75,000/– |
| 10 | ரூ. 1,50,000/– |
| 15 | ரூ. 2,25,000/– |
| 20 | ரூ. 3,00,000/– |

**நல நிதியம்**

பத்திரிகையாளர் நலநிதிக்கென நிரந்தர நிதியாக ‘தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில்’ ஒரு கோடி ரூபாய் வைப்பீடு செய்யப்பட்டு, இந்த தொகையின் மூலம் கிடைக்கப் பெறும் வட்டித் தொகையிலிருந்து பத்திரிகையாளர்கள் பணிக்காலத்தில் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளும் நேரத்தில், அவர்களுக்கு மருத்துவ நிதியுதவி வழங்கிட நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச தொகை **1.8.2018** முதல் ரூபாய் ஒரு இலட்சமாக உயர்த்தி வழங்கிட ஆணையிடப்பட்டது.

**அரசு வாடகைக் குடியிருப்பு**

பத்திரிகைத் துறையில் பணிபுரியும் செய்தியாளர்களுக்கு அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டில் சென்னை மற்றும் அந்தந்த மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. கடந்த **9** ஆண்டுகளில் **255** வீடுகள் பத்திரிகையாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**வீட்டுமனை வசதி**

மாவட்டங்களில் பணியாற்றும் செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சியில் பணிபுரிபவர்களுக்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதியின் பேரில் சலுகை விலையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை மூலம் வீட்டுமனை வழங்கப்படுகின்றன.

## செய்தியாளர் அங்கீகார அட்டை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள் மற்றும் மிக முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கு சென்று செய்திகள் சேகரித்திட ஏதுவாக, நாளிதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் தொலைக்காட்சியில் பணிபுரியும் செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பாண்டிற்கு 758 செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## செய்தியாளர் அட்டை

செய்தியாளர்கள் முக்கிய இடங்களுக்குச் சென்று செய்திகள் சேகரித்து வெளியிட ஏதுவாக, காலமுறை இதழ் செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றது. நடப்பாண்டிற்கு 301 செய்தியாளர்களுக்கு செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## செய்தியாளர்களுக்கான கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை

அரசு அங்கீகார அட்டை பெற்றுள்ள அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் சென்னை மற்றும் விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் பயணம் செய்திட, ஆண்டுதோறும் 502 அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்களுக்கு ‘கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை’ வழங்கப்பட்டு வருகிறது. அதே போன்று அந்தந்த மாவட்டங்களில், மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையின் பேரில், செய்தியாளர்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் 10,105 செய்தியாளர்களுக்கு ரூபாய் 5 கோடியே 2 இலட்சம் செலவில் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## செய்தி முகமைகள்

பி.டி.ஐ. (Press Trust of India) மற்றும் யு.என்.ஐ. (United News of India) ஆகிய இரண்டு செய்தி முகமைகள் வெளியிடும் செய்திகள் கீழ்க்காணும் அலுவலகங்களில் 24 மணி நேரமும், ஆண்டு முழுவதும் பெறப்படுகின்றன.

1) மாண்புமிகு ஆளுநர் மாளிகை

2) செய்தி வெளியீட்டுப் பிரிவு, தலைமைச் செயலகம்

நாடு முழுவதிலும் இருந்து தகவல்கள் பெறப்படுகின்றன. மிக முக்கியமான செய்திகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அவை உரிய அரசுத்துறை அலுவலர்களின் கவனத்திற்கு உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

## செய்தி மக்கள் தொடர்புத்துறை வலைதளம்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப ஊடகங்கள் உடனுக்குடன் தங்களுக்கு தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் ஆகியவற்றை வலைதளத்தின் வாயிலாக பெற்றிடவும், அதேபோல, பொதுமக்களும் இவற்றை பார்த்துப் பயனடைய ஏதுவாகவும் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் www.tndipr.gov.in என்னும் வலைதளம் சிறப்புடன் இயங்கி வருகிறது. செய்தியாளர்கள் இவ்வலைதளத்தின் உள் நுழைந்து தங்களுக்குத் தேவையான அரசு சார்ந்த செய்திகள், புகைப்படங்கள் மற்றும் காணொலிக்காட்சிப் பதிவுகள் ஆகியவற்றை பதிவிறக்கம் செய்துகொள்ளவும், இணையதள பக்கத்திலேயே அவற்றை பார்த்துப் பயன்பெறவும், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் உடனுக்குடன் பதிவேற்றம்

செய்யப்படுகின்றது. இந்த வலைதளம் உலகளவிலுள்ள தமிழர்களும், பொதுமக்களும் தமிழகத்தின் அன்றாட நிகழ்வுகளை அறிந்துகொள்ளப் பெரிதும் பயன் தரும் வகையில் சிறந்த வலைதளமாக உள்ளது.

## செய்தியாளர் அறை

தலைமைச் செயலகத்தில் அமைந்துள்ள செய்தியாளர் அறையில் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க ஒரு குடிநீர் சுத்திகரிப்பு உபகரணமும் (RO Plant system), செய்தியாளர் தவிர்த்து ஏனையோர் வருகையை கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில் இரண்டு சிசிடிவி கேமராக்களும், புதிய எல்இடி தொலைக்காட்சிப் பெட்டியும் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## ஊடக மையம்

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஊடக மையம் தலைமைச் செயலக பழைய கட்டடத்தின் தரை தளத்தில் விடுமுறை ஏதுமின்றி 24 மணி நேரமும் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் 16 தொலைக்காட்சி சேனல்களில் வெளிவரும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் அரசு சார்பான செய்திகளும் பதிவு செய்யப்படுகிறது. தலைமைச் செயலகத்தில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், செய்திக்குறிப்புகள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகள் அனைத்தும் ஊடக மையத்திலிருந்து சென்னையில் உள்ள அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அதோடு இவைகள் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு, அந்தந்த மாவட்டப் பதிப்புகளில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மேற்கண்ட செய்திகள், ஊடகங்களில் வெளியான விவரங்களை ஒவ்வொரு நாளும் தலைமைச் செயலகத்தில் உள்ள ஊடக மையத்திற்கு அனுப்பி வைக்கின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்பான செய்தி வெளியீடுகள், செய்திக் குறிப்புகள் மற்றும் புகைப்படங்கள் மாவட்ட நாளிதழ்களில் சரியாக வெளியிடப்பட்டு வருகின்றனவா என்ற விவரங்கள் கண்காணிக்கப்படுகின்றன. தலைமையிடத்தில் வெளியிடப்படும் செய்திகள் மாநிலம் முழுவதும் உடனடியாக நாளிதழ்களில் வெளிவருவதில் ஊடக மையம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

2019–2020ஆம் நிதியாண்டிற்கான மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட "பத்திரிகையாளர்களுக்கு நல வாரியம்" அமைப்பது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் முதற்கட்டப் பணியாக பத்திரிகையாளர் நலவாரியம் அமைப்பது குறித்த சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பான ஆய்வுக் கூட்டம் கூடுதல் தலைமைச் செயலாளர்(நிதி) அவர்களின் தலைமையில் கூட்டங்கள் நடத்தப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## புகைப்படப் பிரிவு

சென்னை தலைமைச் செயலகத்தில் இயங்கி வரும் புகைப்படப் பிரிவில் உள்ள புகைப்படக்காரர்களைக் கொண்டு தலைமையிடம் மற்றும் மாவட்டங்களில், மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகளை புகைப்படமெடுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து மாவட்ட அளவில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளை புகைப்படம் எடுத்து வருகின்றனர்.

தலைமைச் செயலகப் புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் தலைமைச் செயலக செய்தி வெளியீட்டுப் பிரிவின் மூலம் ஊடகங்களில் பிரசுரிப்பதற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் இந்த புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்கு தலைமைச் செயலகம் மற்றும் புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்திலும் காட்சிப்படுத்தப்படுகிறது. அதுபோலவே, மாவட்டங்களில் உள்ள புகைப்படக்காரர்களால் எடுக்கப்படும் புகைப்படங்கள் பிரசுரிப்பதற்காக அந்தந்த மாவட்டத்தில் இயங்கி வரும் செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும், அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் முக்கிய அரசு நிகழ்ச்சிகளில் நடத்தப்படும் சிறு புகைப்படக் கண்காட்சிகளிலும் புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படுகிறது.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த புதிய திட்டங்கள் தொடர்பான புகைப்படங்கள், சாதனை மலர், ‘‘தமிழரசு’’ தமிழ் மற்றும் ஆங்கில இதழ்கள் மற்றும் காலப்பேழை மலரிலும் அச்சடிக்கப்பட்டு பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்பட்டு வருகிறது.

அனைத்து அரசு நிகழ்ச்சிகளில் எடுக்கப்படும் புகைப்படங்கள் எதிர்கால பயன்பாடு கருதி குறுந்தகடு (DVD) மற்றும் வன்தகட்டுகளில் (Hard Disk) சேமிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுகிறது.

# மேற்கோள் பிரிவு

அனைத்து நாளிதழ்கள், பருவ இதழ்கள், வெளிமாநில நாளிதழ்கள் போன்றவற்றில் வெளிவரும் முக்கியச் செய்திகளை பல்வேறு இனங்களாக, பிரித்து துறை வாரியாக நாள்தோறும் அரசின் கவனத்திற்கு எடுத்துச்செல்லும் முக்கியப் பணியை செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மேற்கோள் பிரிவு செவ்வனே செய்து வருகிறது.

இப்பிரிவில் நாள்தோறும் காலை, மாலை நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வெளிமாநில நாளிதழ்களில் வெளியாகும் முக்கியச் செய்திகள், செய்தி நறுக்குகளாக தொகுக்கப்பட்டு தினந்தோறும் காலையும், மாலையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரின் பார்வைக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. அதேபோல, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசுத் துறைகளின் செயலாளர்களின் பார்வைக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்பட்டு, சம்மந்தப்பட்ட துறையின் மூலம் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதை தவிர இப்பிரிவில், அரசுத் துறைகள் குறித்து வெளிவரும் முக்கியச் செய்திகள் ‘உள்ளறி’ (Scan) செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களுக்கு மின்னஞ்சல் (e-mail) மூலமும், கட்செவி (Whats App) மூலமும் உடனுக்குடன் அனுப்பப்பட்டு வருகின்றன. மேலும் முக்கியமான நாளிதழ்கள் முறையாக தொகுக்கப்பட்டு

பைண்டிங் செய்யப்பட்டு எதிர்காலத் தேவைக்கென இப்பிரிவில் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெறும் காலங்களிலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அலுவலகம், மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் ஆகியோருக்கு நாளிதழ்களில் வெளியாகின்ற முக்கியச் செய்தி நறுக்குகள் தேவைப்படும்போது அனைத்து நேரங்களிலும் உடனுக்குடன் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், உரைகள், செய்தியாளர்கள் சந்திப்பு, அரசின் திட்டங்கள், சாதனைகள், வழங்கப்படும் அரசு நலத்திட்ட உதவிகள், உள்ளிட்ட அனைத்து செய்தி நறுக்குகளும், பல்வேறு தலைவர்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள், நாளிதழ்களின் கட்டுரைகள், தலையங்கங்கள் போன்றவையும் தனித்தனித் தலைப்புகளில் தொகுக்கப்பட்டு நவீன முறையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

# நினைவகங்கள்

தமிழகத்தின் புகழ்சால் பெருந்தகையாளர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு, தமிழ்நாட்டிற்கு பெருமையினை தேடித் தந்த அறிஞர் பெருமக்கள், சமூகநீதிகளை விடுதலை உணர்வுகளை ஊட்டி வளர்த்த கவிஞர்கள் மற்றும் இசை மேதைகள், தமிழ்நாட்டின் தியாக வரலாற்றுக்கு உன்னத சாட்சியங்களாக விளங்கும் தியாகிகளின் நினைவுகளைப் போற்றி பெருமைப்படுத்துகின்ற வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில், 71 நினைவகங்கள், 4 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள், ஒரு நினைவுச்சின்னம் ஆகியன உருவாக்கப்பட்டு, இன்றைய தலைமுறையினரும் எதிர்கால சந்ததியினரும் அறிந்து பயனடையும் வகையில், சிறந்த முறையில் பராமரிக்கப்படுவதோடு பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.

**அ) 2018–2019ம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை விதி எண் 110–ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகள்:**

- நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் அல்லாள இளைய நாயகர் அவர்களுக்கு ரூ.21.80 இலட்சம் மதிப்பீட்டில் குவிமாடத்துடன் (Dome) திருவுருவச் சிலை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையில், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ரூ.92.27 இலட்சம் மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.

- செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அருகில் உள்ள அச்சிறுப்பாக்கம் கிராமத்தில் இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு ரூ.97.64 இலட்சம் மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபத்தை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒண்டிவீரன் மணிமண்டபத்தை ரூ.51.78 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அதே வளாகத்தில் ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- தூத்துக்குடி மாவட்டம், கவர்ணகிரியில் அமைந்துள்ள வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தை ரூ.72.70 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைப்பதுடன், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புனரமைப்புப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சர்.ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களுக்கு ரூ.43.40 இலட்சம் மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு ரூ.99.25 இலட்சம் மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்க, அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.

- கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஒடையகுளம் கிராமத்தில் திரு.வி.கே.பழனிசாமி கவுண்டர் அவர்களுக்கு ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் முழு திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபமும், அதிலேயே ஒரு நூலகமும் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.
- 1920ஆம் ஆண்டு மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள பெருங்காமநல்லூரில் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் எதேச்சதிகார சட்டத்தை எதிர்த்துப் போராடி, தங்கள் இன்னுயிரை ஈந்த பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 நபர்களை கௌரவிக்கும் வகையிலும், அந்நிகழ்வு நடந்து 100 ஆண்டுகள் ஆனதைக் குறிக்கும் வகையிலும், ஒரு நினைவு மண்டபம் தமிழ்நாடு அரசால் கட்டப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து, நினைவு மண்டபம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஆ) 2019–2020ஆம் ஆண்டில் சட்டமன்றப் பேரவை விதி எண் 110ன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு:**

- திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் எம்.கே.தியாகராஜ பாகவதர் அவர்களுக்கு ரூ.42.69 இலட்சம் மதிப்பீட்டில் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கும் பொருட்டு, அரசாணை வெளியிடப்பட்டு கட்டுமானப் பணிகள் துவங்கப்படவுள்ளது.

**2019–2020ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்: புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வரும் மணிமண்டபம்/நினைவகம்/நினைவில்லம்**

- கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள காந்தி மண்டபத்தை ரூ.30.52 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தி, அம்மண்டபத்திற்கு தேவையான மரத்தளவாடங்கள் வாங்க அரசாணை வெளியிடப்பட்டு, மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் நினைவகத்தை ரூ.10.50 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்தி, அந்நினைவகத்திற்கு தேவையான மரத்தளவாடங்களை வாங்க அரசாணை வெளியிடப்பட்டு, மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் இல்லத்தை ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு, மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் ரூ.9.85 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டுதல் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, சுற்றுச் சுவர் கட்டுமானப் பணிகள் மற்றும் வர்ணம் பூசும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- சென்னையில் அமைந்துள்ள கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபத்தில் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் புத்தகங்கள் மற்றும் மரத்தளவாடங்களை கொள்முதல் செய்து புதிதாக நூலகம்

அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, தேவையான புத்தகங்கள் மற்றும் தளவாடங்களுடன் புதிதாக நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தூத்துக்குடி மாவட்டம், கயத்தாரில் உள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபத்தில் ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டில் தேவையான புத்தகங்கள் மற்றும் மரத்தளவாடங்களுடன் நூலகம் புதிதாக அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, புதிதாக நூலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2018–2019ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்: கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் நினைவுத்தூண்/நினைவாலயம்**

- தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டியில் ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் பாரத மாதா நினைவாலயம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, 70 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

- தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் இசை மேதை நல்லப்பசுவாமி அவர்களுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நினைவுத் தூண் அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. விரைவில் திறக்கப்பட உள்ளது.

**கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் நினைவு மண்டபம்/ நினைவில்லம்/ மணிமண்டபங்கள்**

- மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு ரூபாய் 50 கோடியே 80 இலட்சம் மதிப்பீட்டில் நினைவு மண்டபம் அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அடிக்கல்

நாட்டப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

- மாண்புமிகு மேனாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா வாழ்ந்த சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள "வேதா நிலையம்" இல்லத்தை அரசு நினைவிடமாக மாற்றுவதற்கு, "வேதா நிலையம்" இல்லம் அமைந்துள்ள நிலத்தினைக் கையகப்படுத்த சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 2018–2019ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள்: புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நினைவகங்கள்

- சென்னை, வள்ளுவர் கோட்டத்தை ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பழுதுபார்த்தல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.
- திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில் அமைந்துள்ள மாவீரன் பூலித்தேவன் மாளிகை மற்றும் திருமண மண்டபத்தை ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

## தமிழகத்தில் அமைந்துள்ள நினைவகங்களின் விவரம்

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும் அருங்காட்சியகம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 2 | பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம் (ம) புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா நினைவிடம் | மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை |
| 3 | பெருந்தலைவர் காமராஜர் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 4 | பெரியவர் எம்.பக்தவத்சலம் நினைவிடம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 5 | காந்தி மண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 6 | மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 7 | மகாகவி பாரதியார் நினைவு இல்லம் | துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை |
| 8 | பெருந்தலைவர் காமராஜர் நினைவு இல்லம் | திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை |
| 9 | வள்ளுவர் கோட்டம் | நுங்கம்பாக்கம், சென்னை |
| 10 | மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 11 | தியாகிகள் மணிமண்டபம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 12 | இரட்டைமலை சீனிவாசன் நினைவகம் | சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 13 | கண்ணியத்தென்றல் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயில் மணிமண்டபம் | டாம்ஸ் சாலை, சென்னை |
| 14 | சிந்தனைச் சிற்பி சிங்கார வேலர் மற்றும் சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபம் | இராயபுரம், சென்னை |
| 15 | நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் | அடையாறு, சென்னை |
| 16 | பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம் | சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 17 | திருப்பூர் குமரன் நினைவகம் | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 18 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி மணிமண்டபம் | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 19 | தந்தை பெரியார் நினைவகம் | வைக்கம், கோட்டயம் மாவட்டம், கேரள மாநிலம் |
| 20 | பெரியார்–அண்ணா நினைவகம் | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 21 | தீரன் சின்னமலை மணிமண்டபம் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 22 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 23 | வள்ளல் அதியமான் கோட்டம் | தருமபுரி, தருமபுரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 24 | தியாகி சுப்பிரமணிய சிவா மணிமண்டபம் | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 25 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை நினைவு இல்லம் | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 26 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் நினைவு இல்லம் | வரகனேரி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 27 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம் | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 28 | பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம் | ஆவுடையான்குளம், பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 29 | தில்லையாடி வள்ளியம்மை நினைவகம் | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 30 | தமிழிசை மூவர் மணிமண்டபம் | சீர்காழி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 31 | தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா. நினைவு இல்லம் | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 32 | தியாகி பி.சீனிவாசராவ் நினைவு மண்டபம் | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |
| 33 | மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம் | திருவாரூர், திருவாரூர் மாவட்டம் |
| 34 | கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம் | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 35 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம் | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 36 | மருதுபாண்டியர் நினைவு மண்டபம் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 37 | வீரமங்கை வேலுநாச்சியார் நினைவு மண்டபம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 38 | தியாக சீலர் கக்கன் மணிமண்டபம் | தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 39 | தியாகி விஸ்வநாததாஸ் நினைவு இல்லம் | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 40 | பரிதிமாற் கலைஞர் நினைவு இல்லம் | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 41 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் மணிமண்டபம் | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 42 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 43 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 44 | தியாகி சங்கரலிங்கனார் மணிமண்டபம் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 45 | மகாகவி பாரதியார் மணிமண்டபம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 46 | மகாகவி பாரதியார் இல்லம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 47 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் இல்லம் | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 48 | வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 49 | சுதந்திரப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் நினைவகம் | கவர்ணகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 50 | சுதந்திரப் போராட்ட வீரன் வெள்ளையத்தேவன் நினைவகம் | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 51 | அமுதகவி உமறுப்புலவர் நினைவகம் | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 52 | வீரபாண்டிய கட்டபொம்மன் மணிமண்டபம் | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 53 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. மணிமண்டபம் | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 54 | பூலித்தேவன் நினைவு மாளிகை | நெற்கட்டும்செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 55 | தமிழறிஞர் கால்டுவெல் நினைவு இல்லம் | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 56 | தியாகி வாஞ்சிநாதன் மணிமண்டபம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 57 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் மணிமண்டபம் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 58 | பொதுவுடைமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம் | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 59 | காந்தி நினைவு மண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 60 | பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம் | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 61 | சதாவதானி<br>செய்குதம்பி பாவலர்<br>நினைவு மண்டபம் | இடலாக்குடி, கோட்டாறு,<br>நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 62 | மார்ஷல் நேசமணி<br>மணிமண்டபம் | நாகர்கோவில்,<br>கன்னியாகுமரி மாவட்டம் |
| 63 | முத்து மண்டபம்<br>(இலங்கையின் கடைசித்<br>தமிழ் மன்னர் விக்ரம<br>ராஜ சிங்கன் நினைவகம்) | வேலூர்,<br>வேலூர் மாவட்டம் |
| 64 | விடுதலைப் போராட்ட<br>வீரர் கோபால் நாயக்கர்<br>மணிமண்டபம் | விருப்பாட்சி,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 65 | மாமன்னர்கள் ஹைதர்<br>அலி, திப்பு சுல்தான்<br>மணிமண்டபம் | அடியனூத்து கிராமம்,<br>திண்டுக்கல் மாவட்டம் |
| 66 | ஓமந்தூர் இராமசாமி<br>ரெட்டியார் மணிமண்டபம் | ஓமந்தூர்,<br>விழுப்புரம் மாவட்டம் |
| 67 | விடுதலைப் போராட்ட<br>வீரர் தியாகி<br>தீரன் சின்னமலை<br>நினைவுச் சின்னம் | சங்ககிரி,<br>சேலம் மாவட்டம் |
| 68 | சுவாமி சகஜானந்தா<br>மணிமண்டபம் | சிதம்பரம்,<br>கடலூர் மாவட்டம் |
| 69 | உழவர் பெருந்தலைவர்<br>நாராயணசாமி நாயுடு<br>மணிமண்டபம் | வையம்பாளையம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். |
| 70 | இராமசாமி படையாட்சியார்<br>நினைவு மண்டபம் | மஞ்சக்குப்பம்,<br>கடலூர் மாவட்டம் |

| வ. எண் | நினைவகம் | அமைவிடம் |
|---|---|---|
| 71 | டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம் | திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம் |

## அரங்கங்கள்

| வ. எண் | அரங்கம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | இராஜாஜி மண்டபம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 2 | கலைவாணர் அரங்கம் | ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை |
| 3 | அண்ணா கலை அரங்கம் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 4 | மகாமகம் பல்நோக்கு கலை அரங்கம் | கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம் |

## நினைவுத் தூண்கள்

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | “வெள்ளையனே வெளியேறு” இயக்கப் பொன்விழா நினைவுத் தூண் | காந்தி மண்டப வளாகம், சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை |
| 2 | சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண் | போர் நினைவுச் சின்னம் அருகில், காமராஜர் சாலை, சென்னை |
| 3 | குடியரசு பொன்விழா நினைவுத் தூண் | காந்தி சிலை அருகில், காமராஜர் சாலை, சென்னை |

| வ. எண் | நினைவுத் தூண் | அமைவிடம் |
|---|---|---|
| 4 | சிப்பாய் புரட்சி நினைவுத் தூண் | வேலூர், வேலூர் மாவட்டம் |
| 5 | பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு விழா நினைவுத் தூண் | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |

**நினைவுச் சின்னம்**

| வ. எண் | நினைவுச் சின்னம் | அமைவிடம் |
|---|---|---|
| 1 | வீரத்தாய் குயிலி நினைவுச் சின்னம் | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |

**புதியதாக அமைக்கப்பட்டுள்ள மணிமண்டபம் / நினைவு மண்டபம் / அரங்கம் / நினைவுச் சின்னம் / நினைவுத் தூண்**

கடந்த 2017ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், மனுநீதிச் சோழன் நினைவு மண்டபம், திருவாரூர் மாவட்டம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம், சென்னை, பட்டுக்கோட்டை அழகிரிசாமி நினைவு மண்டபம், ஆவுடையான்குளம், தஞ்சாவூர் மாவட்டம், மாமன்னர்கள் ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் மணிமண்டபம், அடியனூத்து கிராமம், திண்டுக்கல் மாவட்டம், சுவாமி சகஜானந்தா மணிமண்டபம், சிதம்பரம், கடலூர் மாவட்டம், உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி மணிமண்டபம், வையம்பாளையம், கோயம்புத்தூர் மாவட்டம், இராமசாமி படையாட்சியார் நினைவு மண்டபம், மஞ்சக்குப்பம், கடலூர் மாவட்டம், டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம், திருசெந்தூர், தூத்துக்குடி மாவட்டம் ஆகியவை 12.46 கோடி ரூபாய் செலவில் பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப்பட்டு, பொதுமக்களின் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளன.

# அரசு விழாக்கள்

இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவர்களையும், செம்மொழி, அமுதமொழி என சிறப்புப் பெற்ற நம் தாய்மொழி, தமிழ்மொழி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்த அறிஞர் பெருமக்களைப் போற்றி புகழ்ந்திடவும் அவர்களது நோக்கங்கள் மற்றும் உயரிய சிந்தனைகளை எதிர்காலத் தலைமுறையினர் அறிந்து கொள்ளவும் அவர்களது பிறந்தநாள் விழாக்கள் மற்றும் நினைவு நாள் நிகழ்ச்சிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன.

அரசின் சார்பில் நடத்தப்படும் விழாக்களில் மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று அன்னாரது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலைகள் அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவியும் மரியாதை செலுத்துகின்றனர். சென்னை மாவட்டத்தில் 32 தலைவர்களுக்கும், மாவட்டங்களில் 55 தலைவர்களுக்கும் பல்வேறு இடங்களில் அன்னாரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தப்பட்டு வருகிறது.

## சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 1 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர்.<br>பிறந்த நாள் விழா |
| 2 | ஜனவரி 23 | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்<br>பிறந்த நாள் விழா |
| 3 | ஜனவரி 30 | அண்ணல் காந்தியடிகள்<br>நினைவு நாள் |
| 4 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்<br>பிறந்த நாள் விழா |
| 5 | ஏப்ரல் 14 | டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்<br>பிறந்த நாள் விழா |
| 6 | ஏப்ரல் 17 | சுதந்திரப் போராட்ட வீரர்<br>தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா |
| 7 | ஏப்ரல் 27 | சர்.பிட்டி.தியாகராயர்<br>பிறந்த நாள் விழா |
| 8 | ஏப்ரல் 29 | பாவேந்தர் பாரதிதாசன்<br>பிறந்த நாள் விழா |
| 9 | மே 7 | சித்திரை முழு நிலவு நாளன்று<br>கண்ணகி சிலைக்கு<br>மாலை அணிவித்தல் மற்றும்<br>திருவுருவப் படத்திற்கு மலர்<br>அலங்காரம் செய்து மலர்தூவி<br>மரியாதை செய்தல் |
| 10 | ஜூன் 5 | கண்ணியத் தென்றல் காயிதே மில்லத்<br>முகம்மது இஸ்மாயில் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 11 | ஜுன் 24 | கவியரசு கண்ணதாசன்<br>பிறந்த நாள் விழா |
| 12 | ஜுன் 26 | சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம்<br>பிறந்த நாள் விழா |
| 13 | ஜுலை 7 | இரட்டைமலை சீனிவாசன்<br>பிறந்த நாள் விழா |
| 14 | ஜுலை 11 | வீரன் அழகு முத்துக்கோன்<br>பிறந்த நாள் விழா |
| 15 | ஜுலை 15 | பெருந்தலைவர் காமராஜர்<br>பிறந்த நாள் விழா |
| 16 | ஜுலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி ஆர்யா (எ) பாஷ்யம் |
| 17 | ஜுலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி சங்கரலிங்கனார் |
| 18 | ஜுலை 17 | தியாகிகள் தினம்,<br>தியாகி செண்பகராமன் |
| 19 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன்<br>வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா |
| 20 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா |
| 21 | செப்டம்பர் 16 | இராமசாமி படையாட்சியார்<br>பிறந்த நாள் விழா |
| 22 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா |

| வ. எண் | நாள் | விழாக்கள் |
|---|---|---|
| 23 | செப்டம்பர் 27 | சி.பா. ஆதித்தனார்<br>பிறந்த நாள் விழா |
| 24 | செப்டம்பர் 29 | முன்னாள் சென்னை மேயர் சிவராஜ்<br>பிறந்த நாள் விழா |
| 25 | அக்டோபர் 1 | நடிகர் திலகம் சிவாஜிகணேசன்<br>பிறந்த நாள் விழா |
| 26 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள்<br>பிறந்த நாள் விழா |
| 27 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்<br>பிறந்த நாள் விழா |
| 28 | நவம்பர் 8 | தமிழறிஞர் வீரமாமுனிவர்<br>பிறந்த நாள் விழா |
| 29 | நவம்பர் 14 | பண்டித ஜவஹர்லால் நேரு<br>பிறந்த நாள் விழா |
| 30 | நவம்பர் 23 | கவிஞர் சுரதா பிறந்த நாள் விழா |
| 31 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா |
| 32 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா |

## மாவட்டங்களில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்கள்

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 1 | ஜனவரி 3 | வீரமங்கை வேலுநாச்சியார் பிறந்த நாள் விழா | சூரக்குளம், சிவகங்கை மாவட்டம் |
| 2 | ஜனவரி 15 | ஜான் பென்னிகுயிக் பிறந்த நாள் விழா | லோயர் கேம்ப், தேனி மாவட்டம் |
| 3 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | காமராஜர் சாலை, சென்னை |
| 4 | ஜனவரி 17 | பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 5 | ஜனவரி 18 (தை 5ஆம் தேதி) | காலிங்கராயன் அவர்கள் ராஜவாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் விழா | காலிங்கராயன் அணைக்கட்டு, ஈரோடு மாவட்டம் |
| 6 | ஜனவரி 26 | தியாகி சங்கரலிங்கனார் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 7 | ஜனவரி 28 (தைப்பூசத் திருநாள்) | திருமலை நாயக்கர் பிறந்த நாள் விழா | மதுரை, மதுரை மாவட்டம் |
| 8 | பிப்ரவரி 1 | ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் பிறந்த நாள் விழா | ஓமந்தூர், விழுப்புரம் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 9 | பிப்ரவரி 7 | மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் பிறந்த நாள் விழா | சாத்தமங்கலம், மதுரை மாவட்டம் |
| 10 | பிப்ரவரி 18 | சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 11 | பிப்ரவரி 19 | தமிழ்த் தாத்தா உ.வே.சா. பிறந்த நாள் விழா | உத்தமதானபுரம், திருவாரூர் மாவட்டம் |
| 12 | பிப்ரவரி 22 | தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் விழா | தில்லையாடி, நாகப்பட்டினம் மாவட்டம் |
| 13 | பிப்ரவரி 24 | புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா பிறந்த நாள் விழா | சேலம், சேலம் மாவட்டம் |
| 14 | மார்ச் 30 | ரிபெல் முத்துராமலிங்க சேதுபதி பிறந்த நாள் விழா | இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம் |
| 15 | ஏப்ரல் 2 | வ.வே.சுப்பிரமணிய அய்யர் பிறந்த நாள் விழா | வரகனேரி, திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |
| 16 | ஏப்ரல் 10 | தியாகி பி. சீனிவாசராவ் பிறந்த நாள் விழா | திருத்துறைப்பூண்டி, திருவாரூர் மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 17 | ஏப்ரல் 13 | பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் விழா | பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம் |
| 18 | ஏப்ரல் 16 | வீரன் சுந்தரலிங்கம் பிறந்த நாள் விழா | கவர்னகிரி, தூத்துக்குடி மாவட்டம் |
| 19 | ஏப்ரல் 17 | தீரன் சின்னமலை பிறந்த நாள் விழா | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம். |
| 20 | மே 7 (சித்ரா பௌர்ணமி) | வள்ளல் அதியமான் பிறந்த நாள் விழா | அதியமான் கோட்டை, தருமபுரி மாவட்டம் |
| 21 | மே 7 | இராபர்ட் கால்டுவெல் பிறந்த நாள் விழா | இடையன்குடி, திருநெல்வேலி மாவட்டம் |
| 22 | மே 8 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | கயத்தாறு, தூத்துக்குடி மாவட்டம் |
| 23 | மே 8 (சித்திரை இறுதி வெள்ளி) | வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா | பாஞ்சாலங்குறிச்சி, தூத்துக்குடி மாவட்டம் |
| 24 | மே 23 | பெரும்பிடுகு முத்தரையர் பிறந்த நாள் விழா | திருச்சிராப்பள்ளி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 25 | மே 31 | சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் பிறந்த நாள் விழா | வல்லநாடு, தூத்துக்குடி மாவட்டம் |
| 26 | ஜுன் 12 | மார்ஷல் நேசமணி பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 27 | ஜுன் 16 | தியாகி விஸ்வநாததாஸ் பிறந்த நாள் விழா | திருமங்கலம், மதுரை மாவட்டம் |
| 28 | ஜுன் 18 | தியாக சீலர் கக்கன் பிறந்த நாள் விழா | மேலூர் அருகில், தும்பைப்பட்டி, மதுரை மாவட்டம் |
| 29 | ஜுன் 24 | கவிஞர் கண்ணதாசன் பிறந்த நாள் விழா | காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 30 | ஜுலை 6 | தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் பிறந்த நாள் விழா | விளாச்சேரி, மதுரை மாவட்டம் |
| 31 | ஜுலை 11 | வீரன் அழகு முத்துக்கோன் பிறந்த நாள் விழா | கட்டாலங்குளம், தூத்துக்குடி மாவட்டம் |
| 32 | ஜுலை 11 | தவத்திரு குன்றக்குடி அடிகளார் பிறந்த நாள் விழா | குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம் |
| 33 | ஜுலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 34 | ஜுலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | விருதுநகர், விருதுநகர் மாவட்டம் |
| 35 | ஜுலை 15 | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் விழா | திருமலை சாலை, தியாகராயர் நகர், சென்னை மாவட்டம் |
| 36 | ஜுலை 17 | தியாகி வாஞ்சிநாதன், தியாகிகள் தினம் | செங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 37 | ஜுலை 31 | சதாவதானி செய்குதம்பி பாவலர் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 38 | ஆகஸ்ட் 1 மற்றும் 2 | வல்வில் ஓரி விழா | கொல்லிமலை, நாமக்கல் மாவட்டம் |
| 39 | ஆகஸ்ட் 2 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | ஓடாநிலை, அரச்சலூர், ஈரோடு மாவட்டம் |
| 40 | ஆகஸ்ட் 2 (ஆடி 18) | தீரன் சின்னமலை நினைவு நாள் | சங்ககிரி, சேலம் மாவட்டம் |
| 41 | ஆகஸ்ட் 20 | விடுதலைப் போராட்ட வீரர் ஒண்டி வீரன் நினைவு நாள் | பாளையங்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் |
| 42 | ஆகஸ்ட் 21 | பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் பிறந்த நாள் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 43 | செப்டம்பர் 1 (ஆவணி 16) | விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்த நாள் விழா | நெற்கட்டும் செவல், திருநெல்வேலி மாவட்டம் |
| 44 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் |
| 45 | செப்டம்பர் 5 | விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் நினைவு நாள் | விருப்பாட்சி, திண்டுக்கல் மாவட்டம் |
| 46 | செப்டம்பர் 5 | கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் பிறந்த நாள் விழா | திருநெல்வேலி, திருநெல்வேலி மாவட்டம் |
| 47 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | அண்ணா சதுக்கம், சென்னை மாவட்டம் |
| 48 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம் |
| 49 | செப்டம்பர் 15 | பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 50 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | ஈரோடு, ஈரோடு மாவட்டம் |
| 51 | செப்டம்பர் 17 | தந்தை பெரியார் பிறந்த நாள் விழா | வைக்கம், கேரளா மாநிலம் |

| **வ. எண்** | **நாள்** | **விழாக்கள்** | **நிகழ்விடம்** |
|---|---|---|---|
| 52 | செப்டம்பர் 25 | பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி பிறந்த நாள் விழா | உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் |
| 53 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம், கன்னியாகுமரி, கன்னியாகுமரி மாவட்டம் |
| 54 | அக்டோபர் 2 | அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா | அனைத்து மாவட்டங்கள் |
| 55 | அக்டோபர் 4 | தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் விழா | பாப்பாரப்பட்டி, தருமபுரி மாவட்டம் |
| 56 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | திருப்பூர், திருப்பூர் மாவட்டம் |
| 57 | அக்டோபர் 4 | திருப்பூர் குமரன் பிறந்த நாள் விழா | சென்னிமலை, ஈரோடு மாவட்டம் |
| 58 | அக்டோபர் 9 | பெரியவர் எம்.பக்தவத்சலம் பிறந்த நாள் விழா | காந்தி மண்டபம், சென்னை மாவட்டம் |
| 59 | அக்டோபர் 10 | நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாள் விழா | நாமக்கல், நாமக்கல் மாவட்டம் |
| 60 | அக்டோபர் 23 | அமுத கவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 61 | அக்டோபர் 24 | மருதுபாண்டியர் நினைவு நாள் | திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம் |
| 62 | அக்டோபர் 30 | பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா | பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டம் |
| 63 | நவம்பர் 1 | கன்னியாகுமரி மாவட்டம் தாய்த் தமிழ்நாட்டுடன் இணைந்த நாளை முன்னிட்டு மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் விழா | நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் |
| 64 | நவம்பர் 11 | சுயமரியாதைச் சுடரொளி என். ஜீவரத்தினம் பிறந்த நாள் விழா | இராயபுரம், சென்னை மாவட்டம் |
| 65 | டிசம்பர் 10 | மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா | தொரப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம் |
| 66 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம் |

| வ. எண் | நாள் | விழாக்கள் | நிகழ்விடம் |
|---|---|---|---|
| 67 | டிசம்பர் 11 | மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா | திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம் |
| 68 | டிசம்பர் 12 | அதங்கோட்டாசான் விழா | அதங்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் |

**2017 முதல் 2020 வரையிலான ஆண்டுகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களால் கீழ்வரும் 11 தலைவர்களை பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.**

- கொடிகாத்த குமரன் பிறந்த நாள் விழா அக்டோபர் 4 அன்று திருப்பூர் குமரன் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், சென்னிமலையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- விடுதலைப் போராட்ட வீரர் பூலித்தேவன் பிறந்தநாள் விழா ஆவணி திங்கள் 16ஆம் நாள் அன்று திருநெல்வேலி மாவட்டம், நெற்கட்டும் செவலில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- சமூக நீதிக்காக பாடுபட்டவரும், சுதந்திர போராட்ட வீரருமான திரு.இராமசாமி படையாட்சியார் அவர்களின் பிறந்த நாள் விழா செப்டம்பர் 16 அன்று சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

- திரு.சிவாஜி கணேசன் கலைத்துறைக்கு ஆற்றிய சேவையை போற்றிடும் வகையில் அவர்களின் பிறந்த நாள் விழா அக்டோபர் 1 அன்று சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் பிறந்த நாள் விழா ஜனவரி 17 அன்று சேலம் மாநகரில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- புரட்சித்தலைவி அம்மா செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பிறந்த நாள் விழா பிப்ரவரி 24 அன்று சேலம் மாநகரில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- சிலம்புச் செல்வர் திரு.ம.பொ.சிவஞானம் அவர்களின் பிறந்த நாள் விழா ஜூன் 26 அன்று சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- திரு.சி.பா.ஆதித்தனார் அவர்களின் பிறந்த நாள் விழா செப்டம்பர் 27 அன்று சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்த நாள் விழா ஜூலை 11 அன்று சென்னையில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- கர்னல் ஜான் பென்னிகுயிக் அவர்களின் பிறந்த நாள் விழா ஜனவரி 15 அன்று தேனி மாவட்டத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

- திரு.காலிங்கராயன் அவர்கள் ராஜ வாய்க்காலை வெட்டி நாட்டுக்கு அர்ப்பணித்த நாள் நினைவாக தை மாதம் 5ஆம் தேதி அரசு விழா ஈரோடு மாவட்டத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## அரசு சார்பில் கொண்டாடப்படும் சிறப்பு விழா

தமிழ் வளர்ச்சித்துறை மற்றும் செய்தித்துறை இணைந்து திருவள்ளுவர் பிறந்த தினமான தைத்திங்களில், திருவள்ளுவர் திருநாள் மற்றும் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்கும் விழா ஆண்டுதோறும் திருவள்ளுவர் தினத்தன்று மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில், தமிழுக்குப் பெருமை சேர்த்துள்ள அறிஞர் பெருமக்களுக்கு 'திருவள்ளுவர் விருது', 'தந்தை பெரியார் விருது', 'பேரறிஞர் அண்ணா விருது', 'அண்ணல் அம்பேத்கர் விருது', 'பெருந்தலைவர் காமராஜர் விருது', 'மகாகவி பாரதியார் விருது', 'பாவேந்தர் பாரதிதாசன் விருது', 'தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது' மற்றும் 'கி.ஆ.பெ. விசுவநாதம் விருது' உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்படுகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்பட்டு வரும் அரசின் "முத்திரை பதித்த மூன்றாண்டு முதலிடமே அதற்குச் சான்று" என்ற முழக்கத்துடன் மூன்றாண்டு சாதனை விழா 17.02.2020 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

# கள விளம்பரம்

மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள், கடந்த 2013ஆம் ஆண்டில் தமிழக அரசின் திட்டங்களையும், அரசின் சாதனைகளையும் அனைத்து மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பரப் பணிகளையும், தமிழ்நாடு அரசின் அனைத்துத் துறைகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு அரசின் நலத்திட்டங்களால் மக்கள் அடைந்துள்ள பயன்களை ஆவணப்படுத்தும் பணிகளையும் ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கள விளம்பரப் பிரிவு என்னும் புதிய பிரிவை இத்துறையில் உருவாக்கினார்கள்.

## வீடியோ வாகன மின்னணு விளம்பரத் திரைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நவீன தொழில்நுட்ப முறையில் மின்னணு விளம்பரத் திரை பொருத்திய 32 புதிய மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்களை அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கியுள்ளார்கள். இந்த மின்னணு விளம்பரத்திரை வீடியோ வாகனங்கள், பகல், இரவு மற்றும் அனைத்து நேரங்களிலும் மக்கள் கூடும் இடங்களிலும், அரசு விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் அரசின் திட்டங்கள், சாதனைகள் குறித்த விளம்பரப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்விளம்பரக் காட்சி ஊர்திகளின் அன்றாட நடமாட்டத்தை ‘புவிதிசைச்சுட்டி’ (GPS) வாயிலாக கண்காணிக்கும் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

**விளம்பர மின்னணு திரைகள்**

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள அரசின் சாதனைகள் மற்றும் திட்டங்களின் தொகுப்பு கொண்ட குறும்படங்கள் தொடர்ந்து பொதுமக்கள் அதிக அளவில் நாள்தோறும் வந்து சென்றிடும் இடங்களான தலைமைச் செயலகம், 32 மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், சென்னையில் உள்ள 3 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுடில்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகியவற்றில் குறும்படங்கள் 'மின்னணுத் திரை' (LED Screen) மூலம் திரையிடப்பட்டு கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**பொதுமக்களுக்கு விழிப்புணர்வு விளம்பரப் பணிகள்**

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் 2012 (The protection of Children from Sexual offenses (Pocso) Act, 2012) என்ற போக்ஸோ சட்டத்தின் கீழ் குழந்தைகளை பாதுகாக்க சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய போக்ஸோ கமிட்டி மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் ஒட்டுவில்லைகள் (Stickers), துண்டு பிரசுரங்கள் (Pamphlets), குறும்படம், குறும்பாடல்கள், சுவரொட்டிகள் (Wall posters) ஆகியவற்றின் வாயிலாக விழிப்புணர்வு விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான உலகளாவிய இலக்குகளை விளம்பரப்படுத்துதல்

2015 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை 2030 ஆம் ஆண்டிற்குள் எட்ட வேண்டிய இலக்குகள் தொடர்பாக 17 நிலையான உலகளாவிய இலக்குகளை அறிவித்தது.

அவை, ஏழ்மை இன்மை; பட்டினி இன்மை; நல்ல ஆரோக்கியம்; தரமான கல்வி; பாலின சமத்துவம்; தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம்; புதுப்பிக்கத்தக்க மற்றும் குறைந்த செலவிலான எரிசக்தி; தரமானப் பணிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி; தொழில்; கண்டுபிடிப்பு மற்றும் அடிப்படை வசதி; ஏற்றத்தாழ்வை குறைத்தல் உள்ளிட்ட 17 இலக்குகள் ஆகும்.

செய்தி மக்கள் தொடர்புத்துறை பிற அரசு துறைகளுடன் இணைந்து மேற்கூறிய ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான உலகளாவிய இலக்குகளை, செய்தி வெளியீடுகள், அரசு பொருட்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள், தமிழரசு மாத இதழ் ஆகியவற்றின் வாயிலாக விளம்பரம் செய்வதற்கும், விளம்பரப் பணிகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதில் 12வது இலக்கான, பொறுப்புள்ள நுகர்வு மற்றும் உற்பத்தி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையுடன் (இலக்கு எண் 12.8) தொடர்புடையது. 2030க்குள், எல்லா இடங்களிலும் உள்ள மக்கள் இயற்கையுடன் இயைந்து ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் வாழ்க்கை முறைகளுக்கான தகவல்களையும் விழிப்புணர்வையும் கொண்டிருப்பதை உறுதி செய்தல் ஆகும்.

மாநிலத்தின் முக்கியமான திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான தகவல்களை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறை கண்காட்சியை நடத்துகிறது. தமிழரசு இதழ், மாநில திட்டங்களைப்பற்றி பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுதோடு மேலும் பல்வேறு திட்டங்களின் நன்மைகளைப் பெறவும் வழிவகை செய்கிறது. மேலும், மற்ற அரசு துறைகளுடன் ஒருங்கிணைந்து செய்தி வெளியீடுகள், அரசு கண்காட்சிகள், புகைப்படக் கண்காட்சிகள் மூலம் மேற்சொன்ன நீடித்த வளர்ச்சி; இலக்குகளை மக்களிடையே பரப்புவதற்கு செய்தி மக்கள் தொடர்புத் துறை தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது. அவற்றில் சில—

தமிழ்நாடு திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையில் பணியாற்றும் தொழிலாளர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நலனுக்காகவும், அவர்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்குவதற்காகவும் தமிழக அரசு திரைப்படத் துறையினர் நல வாரியத்தை உருவாக்கி நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

செய்தியாளர்களின் நலனைப் பாதுகாப்பதில் செய்தி மக்கள் தொடர்புத் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. 20 ஆண்டுகள் பணியாற்றி நலிவுற்ற நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், ஓய்வூதியம் பெற்ற பத்திரிகையாளர்கள் மறைவுக்கு பின்னர் அவர்களது குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும், பணிக்காலத்தில் இயற்கை எய்தும் பத்திரிகையாளர்களுக்கு குடும்ப

உதவிநிதியும், கடும் நோயினால் பாதிக்கப்பட்ட பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதி உதவியும், அரசு வாடகை குடியிருப்பில் குறைந்த வாடகையில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டும், சலுகை விலையில் வீட்டுமனைகளும், பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்திட பேருந்து பயண அட்டையும் வழங்கப்படுகின்றன.

## அலுவலர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி

தேர்ந்த அனுபவம் கொண்ட அலுவலர்கள், நெறியாளர் மற்றும் மனவளக்கலை நிபுணர் ஆகியோரின் வாயிலாக, அரசுப் பணியில் புதிய நடைமுறைகள், பணித்திறனை மேம்படுத்திட புதிய உத்திகள், நல் ஆளுமைப் பயிற்சி உள்ளிட்டவை இப்புத்தாக்கப் பயிற்சியில் பயிற்றுவிக்கப்பட்டு, அனைவருக்கும் மனவள கலைப்பயிற்சி (Stress Management) ஆண்டுதோறும் செய்தி மக்கள் தொடர்புத்துறையில் மாவட்டங்களில் பணியாற்றும் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி மற்றும் விளம்பரம்) ஆகியோருக்கு புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வு மதிப்பீடு

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளான, ஒவ்வொரு பணிக்கும் தனித்தனி மதிப்பெண்கள் வழங்கப்பட்டு, அவர்களின் பணிகளை மாதந்தோறும், தலைமையிட உயர்மட்ட அலுவலர்களைக் கொண்ட தனிக் குழுவினரால் தரமதிப்பீடு செய்யப்படுகிறது. அதில் செய்தியாளர்

கூட்டங்கள் நடத்துதல், செய்தியாளர் பயணங்கள் ஏற்பாடு செய்தல், நாளிதழ்களில் அரசின் வளர்ச்சித் திட்டங்கள், வெற்றிக் கதைகள் வெளிவரச் செய்தல், வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், திரையரங்குகளில் அரசின் செய்தி மலர் திரையிடுவதை ஆய்வு செய்தல், சிறப்பு வெளியீடுகள் பிரசுரித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மாதந்தோறும் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகள் எவ்வித சுணக்கமும் ஏற்படாதவாறு, மாவட்டங்களில் பணிகளைத் திறம்பட மேற்கொள்ளவும், ஏனைய பிற மாவட்டங்களோடு ஒப்பீடு செய்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கினை எளிதாக எய்திடவும், உத்வேகத்துடன் பணியாற்றிடவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

# விளம்பரம்

தமிழக அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் மற்றும் சமூக நலப்பணிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்பெற்றிட நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் மின்னணு ஊடகங்கள் ஆகியவற்றில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மூலம் விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் ஏனைய பணிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி, வரைகலை மற்றும் நில எடுப்பு விளம்பரங்கள் இத்துறையின் மூலம் நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

அரசுத் துறைகள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்களை, நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்களில் வெளியிடும் மையமாக செய்தி மக்கள் தொடர்பு துறை செயல்பட்டு வருகிறது.

விளம்பரத்தின் தன்மை மற்றும் அவை சென்றடைய வேண்டிய பகுதி, தகவல் கொண்டு போய்ச் சேர்க்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிக்கைகளுக்கு விளம்பரங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள்

அரசு விளம்பரங்கள் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் கூடுதல் செலவு ஏதுமின்றி நவீன மின்னணு தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி அனைத்து ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்களையும் தேசியத் தகவல் மையத்தின் (NIC) வழியாக www.tenders.tn.gov.in என்ற இணையதளத்திலும் வெளியிடப்படுகின்றன. தேவைப்படுவோர் ஒப்பபந்தப்புள்ளிப் படிவங்களை விலையேதுமின்றி பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஒப்பந்தப்புள்ளி விளம்பரங்கள் அரசு நிருணயித்துள்ள கட்டணங்களில் விளம்பரங்களாக நாளிதழ்களிலும், இலவசமாக இணையதளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் பயனாக, தகுதியான அனைவரும் தமிழக அரசு கோரும் ஒப்பந்தப்புள்ளிகளில் பாகுபாடு இன்றி தகுதிக்கு ஏற்ப பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள்

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் இயற்றப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பொதுமக்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில், மாவட்ட / மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் வாரந்தோறும் வியாழக்கிழமை அன்று வெளியிடப்படுகிறன்றன.

ரூ.10 இலட்சத்திற்கு மேல் ரூ.25 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.25 இலட்சத்திற்கு மேல் ரூ.50 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியவை குறித்த ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ரூ.25 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ.50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணிகளின் மதிப்பு ஆகியவை பற்றிய ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன.

இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

# திரைப்பட விருதுகள், சின்னத்திரை விருதுகள் மற்றும் மானியம்

## திரைப்பட விருதுகள்

சமுதாயச் சிந்தனைகளுடன் கூடிய சிறந்த கலைப்படைப்புகளுடன், மனித நல்லுணர்வுகளை பிரதிபலிக்கும் தரமான திரைப்படங்களை தயாரிப்பதை ஊக்கப்படுத்திட சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த நடிகர், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்பக் கலைஞர்களுக்குத் திரைப்பட விருதுகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கென, தகுதிவாய்ந்த தேர்வுக்குழு ஒன்றை அமைத்து சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகையர் மற்றும் சிறந்த தொழில்நுட்ப கலைஞர்களுக்கான விருதுகளை பெறுவதற்குத் தகுதியான கலை வல்லுனர்களை தமிழ்நாடு அரசு தேர்வு செய்து வருகிறது.

இக்குழு தேர்ந்தெடுத்து பரிந்துரைக்கும் சிறந்த திரைப்படங்களுக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 75 ஆயிரம் ரூபாயும், சிறப்புப் பரிசாக 75 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கப்படுவதோடு, நினைவுப்பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மகளிரைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்கு சிறப்புப் பரிசாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த நடிகர் (சிறப்புப்பரிசு), சிறந்த நடிகை (சிறப்புப்பரிசு), சிறந்த வில்லன் நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகர், சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த இயக்குநர், சிறந்த கதை ஆசிரியர், சிறந்த உரையாடலாசிரியர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசிரியர், சிறந்த பின்னணிப் பாடகர், சிறந்த பின்னணிப் பாடகி, சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த திரைப்படத் தொகுப்பாளர், சிறந்த கலை இயக்குநர், சிறந்த சண்டைப் பயிற்சியாளர், சிறந்த நடன ஆசிரியர், சிறந்த ஒப்பனைக் கலைஞர், சிறந்த தையற்கலைஞர், சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (ஆண்) மற்றும் சிறந்த பின்னணிக்குரல் கொடுப்பவர் (பெண்) ஆகியோருக்கு தலா 5 பவுன் தங்கப் பதக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சிறந்த முழுநீளத் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கு 2009 முதல் 2014ஆம் ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் இந்த விருதுகள் அனைத்தும் வழங்கப்படவுள்ளன.

2015ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகளுக்கு தேர்வுக்குழுத் தலைவராக ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.பி.கலையரசன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டு திரைப்பட விருதுகளுக்கு வரப்பெற்ற திரைப்படங்களை பார்வையிட்டுள்ளது.

2016 முதல் 2018ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகளுக்கு தேர்வுக்குழுத் தலைவராக ஒய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.பி.கலையரசன் அவர்கள் தலைமையில் புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

## கலைத்துறை வித்தகர் விருதுகள்

தமிழ்த்திரை உலகில் தமது எழுத்தாலும், நடிப்பாலும் தனி முத்திரை பதித்த பேரறிஞர் அண்ணா, மக்களை சிரிப்பின் மூலம் சிந்திக்க வைத்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், மக்கள் மனம் கவர்ந்த ஏழிசை மன்னர் தியாகராஜ பாகவதர், உழைப்பால் உயர்ந்த பன்முக நடிகர் ராஜாசாண்டோ, மக்கள் மனங்களை கொள்ளைகொண்ட மக்கள் திலகம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர், நடிப்பிற்கே இலக்கணமாக திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், காலத்தால் அழியாத பாடல்கள் படைத்த கவியரசு கண்ணதாசன், புரட்சித் தலைவி அம்மா ஜெ ஜெயலலிதா ஆகியோரின் பெயர்களில் 'கலைத்துறை வித்தகர் விருதுகள்' தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்விருதுகளைப் பெறுகின்ற கலைத்துறை வித்தகர்களுக்கு, தலா 5 பவுன் தங்கப்பதக்கமும், நினைவுப்பரிசும் வழங்கப்படுகின்றன.

## அரசு திரைப்பட மானியம்

சமூக பொறுப்பும் சமுதாய விழிப்புணர்ச்சியுமிக்க திரைப்படங்களைத் தரமாகவும், சிறிய முதலீட்டிலும் தயாரித்து வெளியிடுவோரை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்த் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவின் வாயிலாக, குறைந்த செலவில் தயாரித்து வெளியிடப்படும் தரமான தமிழ்ப்

படங்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு திரைப்படத்திற்கும் இத்திட்டத்தின் வாயிலாக 7 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

2007ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டுகளில், குறைந்த செலவில் தயாரித்து வெளியான தரமான 149 தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு, அரசு மானியம் தலா 7 இலட்சம் ரூபாய் வீதம் 10 கோடியே 43 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 20.06.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற விழாவில் வழங்கினார்கள்.

2015 முதல் 2017ஆம் ஆண்டுகளுக்கான அரசு மானியம் வழங்குவதற்கான தேர்வுக்குழுத் தலைவராக ஓய்வு பெற்ற மாண்புமிகு நீதியரசர் திரு.ஆ.குலசேகரன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## சின்னத்திரை விருதுகள்

மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகப் பெரும் பங்கு வகித்து வரும் சின்னத்திரையில் ஒளிபரப்பாகும் நெடுந்தொடர்கள், குறுந்தொடர்கள் அதில் பங்கேற்கும் நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழ்நாடு அரசின் சார்பில், சின்னத்திரை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிறந்த நெடுந்தொடருக்கு முதல் பரிசாக 2 இலட்சம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 1 இலட்சம் ரூபாய் ரொக்கம், நினைவுப் பரிசு உள்ளிட்ட சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி, சிறந்த கதாசிரியர், சிறந்த திரைக்கதை ஆசிரியர், சிறந்த உரையாடல் ஆசிரியர், சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த படத் தொகுப்பாளர், சிறந்த கதாநாயகன், சிறந்த கதாநாயகி, சிறந்த குணச்சித்திர நடிகர், சிறந்த குணச்சித்திர நடிகை, சிறந்த வில்லன் நடிகர், சிறந்த வில்லி நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த பின்னணி இசையமைப்பாளர், சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (ஆண்), சிறந்த பின்னணிக் குரல் கொடுப்பவர் (பெண்) மற்றும் சிறந்த தந்திரக் காட்சியாளர் என சின்னத்திரைத் துறையில் சிறந்து விளங்குவோர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்குத் தலா 3 பவுன் தங்கப் பதக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

மேலும், ஆண்டின் சிறந்த சாதனையாளர் மற்றும் சிறந்த வாழ்நாள் சாதனையாளராகத் தேர்வு செய்யப்படுவோருக்குத் தலா 1 இலட்சம் ரூபாய் ரொக்கமும், நினைவுப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படுகின்றன.

சின்னத்திரையில் 2009ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டுகளில் வெளிவந்துள்ள சிறந்த தொடர்கள் மற்றும் சிறந்த கலைஞர்களுக்கான விருதுகள், ரொக்கம், நினைவுப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கிட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. விரைவில் விருதுகள் வழங்கப்படவுள்ளது.

2014 முதல் 2018ஆம் ஆண்டுகளுக்கான சின்னத்திரை விருதுகள் தேர்வுக்குழுத் தலைவராக ஓய்வு பெற்ற மாண்புமிகு

நீதியரசர் திரு.ஆ.குலசேகரன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**இந்திய சினிமா நூற்றாண்டு விழா மற்றும் சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதியுதவி**

இந்திய சினிமா நூற்றாண்டு விழாவானது, சென்னையில் கடந்த 21.9.2013 முதல் 24.9.2013 வரை வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த நூற்றாண்டு விழாவினைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் இவ்விழாவினை நடத்திய தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைக்கு அரசின் சார்பாக 10 கோடி ரூபாய் மானியமாக வழங்கினார்கள்.

சென்னையில் பல்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற சர்வதேச திரைப்பட விழாக்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 4 கோடியே 75 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் (NFDC) சார்பில் கோவாவில் நடைபெற்ற 13வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவிற்கு தமிழக அரசின் சார்பில் ரூ.10 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது.

# திரைப்படத்துறையினர் நலவாரியம்

திரைப்படங்களிலும், சின்னத்திரையிலும் பங்களித்து கலையினை வளர்க்கும் கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு உதவிட, செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கீழ் திரைப்படத்துறையினர் நலவாரியம் தோற்றுவிக்கப்பட்டு பலவிதமான நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நலவாரியத்தில், 39 சங்கங்களைச் சார்ந்த திரைப்பட / சின்னத்திரைத் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் உறுப்பினர்களாக சேரத் தகுதி பெற்றவர்கள் ஆவர். இந்நலவாரியத்தில் 21,679 நபர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையின் படைப்பாக்கத்தில் பங்கேற்றுப் பணியாற்றும் பல்வேறு சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, கருக்கலைப்பு மற்றும் கருச்சிதைவு உதவித்தொகை, மூக்குக்கண்ணாடி உதவித்தொகை, விபத்து ஈட்டுறுதித் திட்டம், இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை, ஈமச்சடங்கு உதவித்தொகை போன்ற பல்வேறு நலத்திட்டங்கள் வாயிலாக உதவிகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு :

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| அ. | **கல்வி உதவித் தொகை** | |
| 1 | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| 2 | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பெண் குழந்தைகளுக்கு | 1,000 ரூபாய் |
| 3 | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 ரூபாய் |
| 4 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்க்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| 5 | முறையான பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களுக்கு (இரு பாலருக்கும்) | 1,500 ரூபாய் |
| 6 | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,750 ரூபாய் |
| 7 | முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |
| 8 | மாணவர் விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 3,000 ரூபாய் |
| 9 | தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 2,000 ரூபாய் |
| 10 | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |
| 11 | தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 4,000 ரூபாய் |

| வ. எண் | நலத்திட்ட உதவிகள் | உதவித்தொகை |
|---|---|---|
| 12 | மாணவர் விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 6,000 ரூபாய் |
| 13 | ஐ.டி.ஐ. தொழில் பயிற்சி அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,000 ரூபாய் |
| 14 | மாணவர் விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. அல்லது பலவகை தொழில் பயிற்சிப் படிப்பிற்கு (இரு பாலருக்கும்) | 1,200 ரூபாய் |
| ஆ | திருமண உதவித் தொகை | 2,000 ரூபாய் |
| இ | மகப்பேறு உதவித் தொகை | 6,000 ரூபாய் |
| ஈ | கருக்கலைப்பு / கருச்சிதைவு உதவித் தொகை | 3,000 ரூபாய் |
| உ | மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 ரூபாய் |
| ஊ | **விபத்து ஈட்டுறுதித் திட்டம்** | |
| 1 | விபத்தினால் ஏற்படும் மரணம் | 1 இலட்சம் ரூபாய் |
| 2 | விபத்தினால் ஏற்படும் உடல் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 ரூபாய் முதல் 1 இலட்சம் ரூபாய் வரை |
| எ | இயற்கை மரண உதவித்தொகை | 15,000 ரூபாய் |
| ஏ | ஈமச் சடங்கு உதவித் தொகை | 2,000 ரூபாய் |

நலவாரியத்தால் வழங்கப்படும் திட்டத்தின் மூலம் திரைப்படத்துறை மற்றும் சின்னத்திரையை சேர்ந்த சங்கங்களின் உறுப்பினர்களில் பயன்பெற்ற பயனாளிகளின்

எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த உதவித் தொகை விவரங்கள் ஆண்டு வாரியாகப் பின்வருமாறு:

| வ. எண் | ஆண்டு | மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | 2011 | 38 | 1,98,000/– |
| 2 | 2013 | 728 | 21,39,000/– |
| 3 | 2014 | 303 | 8,00,000/– |
| 4 | 2016 | 277 | 8,00,250/– |
| 5 | 2017 | 259 | 9,41,500/– |
| 6 | 2018 | 449 | 13,61,250/– |
| 7 | 2019 | 205 | 7,20,000/– |
| | மொத்தம் | 2,259 | 69,60,000/– |

நடப்பாண்டில் இதுவரை நலத்திட்ட உதவிகள் கோரி 141 விண்ணப்பங்கள் பெறப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரைப்படத்துறையினர் நலவாரியத்திற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள் தலைவராகவும், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்கள் உறுப்பினர் / செயலராகவும் அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனம் செய்யப்பட்டுள்ள பிற உறுப்பினர்கள் விவரம் பின்வருமாறு:

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைச் செயலாளர், நிதித்துறைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறைச் செயலாளர், வணிகவரித்துறை ஆணையர், உள்துறை துணைச் செயலாளர் (சினிமா), தொழிலாளர் நலத்துறை ஆணையர், நில நிருவாகத்துறை ஆணையர் ஆகிய எட்டு அரசு உயர் அலுவலர்கள் அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் ஆவர்.

**அலுவல் சாரா உறுப்பினர்கள்**

திருவாளர்கள் ஆர்.வி.உதயகுமார் (இயக்குநர்), பி.வாசு (இயக்குநர்), லியாகத் அலிகான் (வசனகர்த்தா), மோகன் காந்திராமன் (இயக்குநர்), ராமராஜன் (நடிகர்), டி.கே.கலா (நடிகை மற்றும் பாடகி), புஷ்பா கந்தசாமி (தயாரிப்பாளர்), நாஞ்சில் பி.சி.அன்பழகன் (இயக்குநர்) மற்றும் செல்வி. எல்.ஆர்.ஈஸ்வரி (திரைப்படப் பின்னணிப் பாடகி) ஆகிய திரைத்துறையை சார்ந்த வல்லுநர்கள் வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாரியத்தின் வாயிலாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் இக்குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.

# தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

## செய்தி படப்பிடிப்பு

அரசின் அன்றாட செயல்பாடுகளை மக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் பொது நிகழ்ச்சிகள் மற்றும் அரசின் நிகழ்ச்சிகளை வீடியோ மூலம் ஒளிப்பதிவு செய்து, அவற்றைத் தொகுத்து தலைமைச் செயலகத்தின் ஊடக மையத்தின் வழியே வீடியோ செய்தி நறுக்குகளாக அரசு மற்றும் தனியார் தொலைக்காட்சிகளுக்கு பதிவேற்றம் செய்து ஒளிபரப்பிடும் பணிகளை தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## தயாரிப்பு மற்றும் வெளியீடு

தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் முக்கியப் பணியாக தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள், செயல்பாடுகள் மற்றும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்து அவ்வப்போது நிகழும் சமூக மாற்றத்திற்கேற்ப பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பின்வருமாறு தயாரித்து வெளியிடப்பட்டு வருகிறது:

## செய்தி தொகுப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கும் அடிக்கல் நாட்டு விழாக்கள், நலத்திட்ட உதவிகள் மற்றும் அவர் கலந்துகொள்ளும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளையும் ஒளிப்பதிவு செய்து இசை மற்றும் பின்னணி

குரல் சேர்த்து, செய்தித் தொகுப்புகளாக தயாரிக்கப்பட்டு பதிவேற்றம் செய்து அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களில் உள்ள மின்னணு வாகனங்கள், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும் உள்ள மின்னணு திரைகள் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு, அரசின் நலத் திட்டங்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் பற்றி பொதுமக்கள் அறிந்து பயனடையும் வகையில் ஒளிபரப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.வீடியோ செய்தி மலர்கள்/குறும்படங்கள்/ குறும்பாடல்கள்**

தமிழக அரசின் மக்கள் நலத் திட்டங்கள், அறிவிப்புகள், வளர்ச்சிப் பணிகள், அடிக்கல் நாட்டு விழாக்கள் மற்றும் அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள் குறித்தும், அவ்வப்போது நிகழும் சமூக மாற்றத்திற்கேற்ப சமூக நலன் குறித்தும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடிகர், நடிகைகள் கொண்டு வீடியோ செய்தி மலர்கள், குறும்படங்கள், குறும்பாடல்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் பேட்டிகள் ஆகியவற்றை தயாரித்து தற்போதுள்ள நவீன தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்றவாறு (State of the Art Technology) திரையரங்க பதிப்புகளாக தயாரித்து அனைத்து டிஜிட்டல் சினிமா திரையரங்குகள், அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து மக்கள் கூடும் அரசு அலுவலகங்களிலும் நிறுவப்பட்டுள்ள மின்னணு திரைகள் மற்றும் அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பி அங்குள்ள நவீன மின்னணு விளம்பர வாகனங்கள் மூலமாகவும் வெளியிடப்பட்டு கள விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஆண்டு தமிழ்நாடு திரைப்படப்பிரிவின் மூலமாக 7 செய்தி தொகுப்புகள், 28 வீடியோ செய்தி மலர்கள் மற்றும் குறும்படங்கள் மற்றும் 10 குறும்பாடல்கள் ஆகியன வெளியிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

**2019– 2020ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ள செய்தி தொகுப்புகள் / செய்தி மலர்கள் / குறும்படங்கள் / குறும்பாடல்கள்**

| வ. எண் | செய்தி தொகுப்புகள் |
|---|---|
| 1 | செய்தி தொகுப்பு – I |
| 2 | செய்தி தொகுப்பு – II |
| 3 | செய்தி தொகுப்பு – III |
| 4 | செய்தி தொகுப்பு – IV |
| 5 | செய்தி தொகுப்பு – V |
| 6 | செய்தி தொகுப்பு – VI |
| 7 | செய்தி தொகுப்பு– VII |

| வ. எண் | வீடியோ செய்தி மலர்கள்/குறும்படங்கள் |
|---|---|
| 1 | குடிநீர் திட்டங்கள் |
| 2 | சுதந்திர தின விழா 2019 |
| 3 | எளியோர் நலம் பேணும் அம்மாவின் அரசு |
| 4 | குழந்தைகள் பாதுகாப்பு (பேட்டி) |
| 5 | விவசாயிகள் நலன் காக்கும் அரசு |
| 6 | குட் நெட்டிசன் குட் சிட்டிசன் (Good netizen Good citizen) |
| 7 | மழை நீர் நம் உயிர் நீர் |

| வ. எண் | வீடியோ செய்தி மலர்கள்/குறும்படங்கள் |
|---|---|
| 8 | தூய்மையே வெல்லும் |
| 9 | மழை நீர் சேகரிப்பு |
| 10 | தேர்தல் விழிப்புணர்வு படம் |
| 11 | விவசாய முதல்வரின் வெற்றிப் பயணம் பகுதி –1 |
| 12 | விவசாய முதல்வரின் வெற்றிப் பயணம் பகுதி –2 |
| 13 | விவசாய முதல்வரின் வெற்றிப் பயணம் பகுதி –3 |
| 14 | மலர்ந்தன புதிய மாவட்டங்கள் |
| 15 | பூத்தன புதிய மாவட்டங்கள் |
| 16 | முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டம் |
| 17 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –1 |
| 18 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –2 |
| 19 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –3 |
| 20 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –4 |
| 21 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –5 |
| 22 | அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள் இது தொடரும் பல்லாண்டு பகுதி –6 |
| 23 | ஊரக வளர்ச்சி நகராட்சி |
| 24 | வேளாண் சிறப்பு மண்டலம் |
| 25 | தொழில் புரட்சியில் தமிழ்நாடு |
| 26 | குடிசை இல்லா தமிழ்நாடு |

| வ. எண் | **வீடியோ செய்தி மலர்கள்/குறும்படங்கள்** |
|---|---|
| 27 | குடிமராமத்து |
| 28 | சிறப்பு தூர்வாரும் பணிகள் திட்டம் |

| வ. எண் | **குறும்பாடல்கள்** |
|---|---|
| 1 | **அம்மா அரசின் மூன்றாண்டு சாதனைகள்**<br>1. அத்திக்கடவு அவினாசித் திட்டம்<br>2. மருத்துவக் கல்லூரிகள்<br>3. மக்கள் குறைதீர்ப்பு முகாம்<br>4. பாலங்கள்<br>5. பேருந்து (பசுமை பேருந்து)<br>6. தொழில்துறை<br>7. உறுப்பு தானத்தில் முதலிடம்<br>8. நீர் மேலாண்மை<br>9. மாவட்டங்கள் பிரிப்பு<br>10.கடல் நீரை குடிநீராக்குவது |

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனைத்து அரசு நிகழ்ச்சிகளை உடனுக்குடன் ஒளிப்பதிவு செய்து ஊடகங்களுக்கு நேரடியாக அனுப்புவதற்கு ஏதுவாக லைவ் பேக் வீடியோ ஸ்ட்ரிமீங் உபகரணம் கொள்முதல் செய்யப்பட்டு அதன் மூலம் அனுப்பப்படுகிறது.
- திரைப்பட தொழில்நுட்ப மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறும்படம் தயாரிக்கப்பட்டு போட்டி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்பட உள்ளது.

- **4,000** வீடியோ கேசட்டுகள் மின்னணு முறையில் பதிவேற்றம் செய்து எண்மிய மின்னணு ஆவண காப்பகம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- **40** ஆண்டுகள் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு வரும் பழைய செய்திச் சுருள்களில் உள்ள தொழில்நுட்ப குறைகளை நீக்கியும், தரத்தை உயர்த்தியும் மின்னணு முறையில் (Digitalization) மாற்றம் செய்திடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம்

திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரைப்பட தொழில்நுட்ப நுணுக்கங்களை பயிற்றுவித்து கலை உணர்வுகளை வெளிப்படுத்த வைத்திடும் முதன்மை நிறுவனமாக எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் விளங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் பலதரப்பட்ட திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்பங்களையும் பிற திரைப்படத் துணைப்பாடங்களையும் மாணவர்களுக்கு கற்றுத் தருவதே இதன் முக்கிய இலக்கு ஆகும்.

தமிழக அரசின் செய்தி மற்றும் விளம்பரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இந்நிறுவனம் 15.25 ஏக்கர் நிலப்பரப்பில் செயல்பட்டு வருகிறது. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம் அகில இந்திய அளவில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சியை அளிக்கும் மூன்று முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். மற்றவை, பூனாவில் உள்ள திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும், கொல்கத்தாவில் உள்ள சத்தியஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனமும் ஆகும்.

**பட்டப் படிப்புகள்**

மாண்புமிகு மேனாள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனம், அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக்குழு (AICTE) அங்கீகாரத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டு நடத்தப்பட்ட பட்டயப் படிப்புகள், தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா இசை மற்றும் கவின்கலை பல்கலைக்கழக அங்கீகாரத்துடன் 2016–2017ஆம் கல்வியாண்டு முதல், நான்காண்டு இளங்கலை காட்சிக்கலை பட்டப்படிப்புகளாக (Bachelor of Visual Arts) மாற்றப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

2018ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட Diploma in Film Technology (DFT) என்ற பட்டயத்திற்கு பதிலாக 2016–2017ஆம் கல்வியாண்டில் சேர்ந்து 2019–2020இல் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு Bachelor of Visual Arts (BVA) என்ற பட்டம் வழங்கப்படவுள்ளது.

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | பட்டப்படிப்பு விவரம் |
|---|---|
| 1 | இளங்கலை காட்சிக்கலை (ஒளிப்பதிவு) |
| 2 | இளங்கலை காட்சிக்கலை (எண்மிய இடைநிலை) |
| 3 | இளங்கலை காட்சிக்கலை (ஒலிப்பதிவு) |
| 4 | இளங்கலை காட்சிக்கலை (இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்) |

| வ.எண் | பட்டப்படிப்பு விவரம் |
|---|---|
| 5 | இளங்கலை காட்சிக்கலை (படத்தொகுப்பு) |
| 6 | இளங்கலை காட்சிக்கலை (உயிர்ப்பூட்டல் மற்றும் காட்சிப்பயன் ) |

மாணவர்களின் சேர்க்கை ஒவ்வொரு கல்வியாண்டிலும், 14 மாணவர்கள் வீதம் ஆறு பாடப்பிரிவுகளுக்கும் 84 மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். பட்டப்படிப்புகளுக்குரிய கல்விக் கட்டணமாக ரூ.15,000/–மும், சிறப்புக் கட்டணமாக ரூ.2,000/–மும், மற்றும் வளர்ச்சிக் கட்டணமாக ரூ.1,000/–மும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்திலிருந்து முழுவதும் விலக்களிக்கப்படுகிறது.

## மாணவர்கள் தயாரிக்கும் படங்களுக்கு நிதியுதவி

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களின் குறும்படம் தயாரிக்க அளிக்கப்படும் நிதியுதவியை தமிழக அரசு 2017–2018ஆம் ஆண்டு முதல் ரூ.15,000/– லிருந்து ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கியுள்ளது. கல்வி இறுதியாண்டில் குறும்படங்கள் தயாரிக்கப்படுவதற்கான பயிற்சி 6 துறைகளிலும் பயிலும் மாணவர்களைக் கொண்ட 14 குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவும் ஒரு குறும்படம் வீதம் 14 குறும்படங்கள் தயாரிக்க தேவையான அனைத்து பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது.

## குறும்பட விருது

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களால் தயாரிக்கப்படும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர் மற்றும் சிறந்த படப்பதனிடுபவர் ஆகியோர் வல்லுநர் குழுவால் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு ''எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்கு குறும்பட விருது'' என்ற பெயரில் விருதும், தலா ஒரு பவுன் தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம் மற்றும் ரூ.5,000/– பரிசும் வழங்கப்பட்டு வருகிறது.

## அம்மா விருது

எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தை சேர்ந்த மாணவர்களின் குறும்படங்கள் ''சென்னை சர்வதேச திரைப்பட விழா''வில் திரையிடப்பட்டு சிறந்த படைப்பாக தேர்வாகும் குறும்படத்திற்கு அம்மா விருது என்ற பெயரில் சிறப்பு விருது மற்றும் ரூ.10,000/– ரொக்கப்பரிசும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2018–2019ஆம் ஆண்டில் நடைபெற்ற 16வது சர்வதேச திரைப்பட விழாவில் ''ஏஞ்சலினா'' என்ற பட்டயக் குறும்படமும், 2019–2020ஆம் ஆண்டில் நடைபெற்ற 17வது சர்வதேச திரைப்பட விழாவில் ''ஜாகிர்ஸ் ரெசிபி'' என்ற குறும்படமும் ''அம்மா'' விருதினை வென்றுள்ளது.

## மும்பை சர்வதேச திரைப்பட விழா

மும்பையில், ஜனவரி 2020இல் நடைபெற்ற 16வது சர்வதேச திரைப்பட விழாவில் எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களின் குறும்படங்கள் மாணவர்களுக்கான பிரத்யேக குறும்பட திரையீட்டில் திரையிடப்பட்டு, திரை வல்லுநர்களால் பெரிதும் பாராட்டப்பட்டது. கீழ்க்காணும் குறும்படங்கள் அங்கு திரையிடப்பட்டது.

| | |
|---|---|
| 1. கறை (Karai) | 7. மஹா (Maha) |
| 2. ரூஜ் (Rouge) | 8. ஃபிரேம் (Frame) |
| 3. ஆயில் (Oil) | 9. கில்ட் (Guilt) |
| 4. லோன்லி ஹார்ட்ஸ் (Lonely Hearts) | 10. தி உல் ஃ ப் ஸ்டோரி (The Wolf Story) |
| 5. ஜாகிர்ஸ் ரெசிபி (Jagir’s Recipe) | 11. செக்ஷன்185 (Section 185) |
| 6. இசையின்ராஜா (Isaiyinraja) | |

## தேசிய விருது 2019

67வது தேசிய திரைப்பட விருதிற்காக 2019–2020ஆம் ஆண்டில் திரையிடுவதற்கு எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களின் குறும்படங்களான கறை (Karai), ரூஜ் (Rouge), லோன்லி ஹார்ட்ஸ் (Lonely Hearts) மற்றும் ஜாகிர்ஸ் ரெசிபி (Jagir’s Recipe) ஆகியவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## மாணவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தில் பயிற்சி

தற்போதைய நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களின் குறும்படங்கள் மற்றும் செயல்முறை பயிற்சிக்காகவும், திரைத்துறைக்கு இணையாக நவீன தொழில்நுட்பக் கருவிகளை வாடகை அடிப்படையில் எடுத்து மாணவர்களுக்கு பயிற்சி வழங்கும் பொருட்டு, தமிழக அரசால் ஆண்டுதோறும் ரூபாய் ஒரு கோடியே **50** இலட்சம் நிதி எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

# திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

திரைப்படம் என்பது அனைத்து தரப்பு மக்களிடம் பொதுவாக வழக்கத்திலுள்ள எளிதாக செல்லக்கூடிய பொழுதுபோக்கு அம்சங்களில் ஒன்றாக திகழ்வதால் திரைப்படத்துறையின் வளர்ச்சியை கருத்தில் கொண்டு அரசு இத்துறையை ஊக்குவித்து வருகிறது.

தமிழ்நாட்டில், தற்போது 903 திரையரங்குகள் கீழ்கண்டுள்ள இனங்களின்படி இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 849 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 44 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 09 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 01 |
| | மொத்தம் | 903 |

திரையரங்குகளில் திரைப்படம் திரையிடுவதை முறைப்படுத்துவதற்கு, தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1955ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்டது. இச்சட்டப்பிரிவுகளின்படி, மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை காவல்துறை ஆணையரும், திரையரங்குகளை அமைப்பதற்கு தடையின்மை சான்றும், திரைப்படங்களை திரையிடுவதற்கு உரிமம் வழங்கும் தகுதி உடைய அதிகாரிகள் ஆவர். இணை ஆணையர், நிலநிருவாக ஆணையரகம் மற்றும் அரசு உள்துறை ஆகியோர் முறையே மேல் முறையீட்டு

அதிகாரியாகவும், சீராய்வு மேற்கொள்ளும் அதிகார அமைப்பாகவும் செயல்பட இச்சட்டப்பிரிவுகளின்படி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திரைப்படத் துறையை ஒழுங்குபடுத்தவும் திரையரங்குகளில் திரைப்படம் காணவரும் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகள், சுகாதாரமான சூழல், பாதுகாப்பு மற்றும் பிற நல அம்சங்கள் வழங்க உறுதி செய்யும் வகையிலும் தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்குமுறை) விதிகள், 1957இல் அரசு கடுமையான வழிமுறைகளை வகுத்துள்ளது. மேலும், இந்த விதிகளின் கீழ் அரசு பார்வையாளர்களின் அனுமதி கட்டணத்தை நிர்ணயிக்கிறது.

அதன்படி, தமிழ்த் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கம் மற்றும் தமிழ்நாடு திரையரங்க உரிமையாளர் சம்மேளனம் ஆகியவற்றின் கோரிக்கைகளைப் பரிசீலித்து, அரசாணை (நிலை) எண்.762, உள் (சினிமா) துறை, நாள் 16.10.2017இல், குளிர்ச்சாதன வசதி கொண்ட மல்டிபிளக்ஸ் திரையரங்குகளுக்கும், மாநகராட்சிகள் / நகராட்சிகள் / நகரப் பஞ்சாயத்துகள் மற்றும் கிராமப் பஞ்சாயத்துகள் ஆகியவற்றில் அமைந்துள்ள, குளிர்ச்சாதன வசதி கொண்ட / குளிர்ச்சாதன வசதியில்லாத இதர திரையரங்குகளுக்கும், அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நுழைவுக் கட்டணத்தைத் திருத்தியமைத்து, அரசு ஆணையிட்டுள்ளது.

## கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பு

இந்தியா முழுவதும் உள்ள கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்பினை 1995ஆம் ஆண்டு கேபிள் தொலைக்காட்சி கட்டமைப்புச் (முறைப்படுத்துதல்) சட்டம் (மத்திய சட்டம் 7/1995)

முறைப்படுத்துகிறது. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின்படி, மாவட்ட மற்றும் உட்கோட்ட மாஜிஸ்டிரேட்டுகள் மற்றும் மாநகர காவல் துறை ஆணையாளர் ஆகியோர் இச்சட்டத்தின் 3, 4A, 5, 6, 8, மற்றும் 9 (அல்லது) 10 ஆகிய பிரிவுகளை மீறும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, தமிழக அரசு சென்னை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாநகரங்களில் மாநகர காவல்துறை ஆணையாளர்கள், மாவட்டங்களைப் பொறுத்தளவில் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்களை கேபிள் தொலைக்காட்சி சட்டத்தில் உள்ள நிபந்தனைகள் மற்றும் வழிமுறைகளை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமித்து அறிவிக்கை வெளியிட்டுள்ளது. மேலும், கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்துதல்) சட்டத்தினை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், மாநகரக் காவல் ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**வீடியோ சட்டமும் விதிகளும்**

1984ஆம் ஆண்டு தமிழ்நாடு வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மற்றும் கேபிள் மூலமாக தொலைக்காட்சிப் பெட்டித் திரையில், திரைப்படங்களைக் காட்டுதல் (முறைப்படுத்துதல்) சட்டம், தமிழ்நாட்டில், வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களை தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்பு செய்வதை முறைப்படுத்துகிறது. இச்சட்டம் வீடியோ

கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில், காவல்துறை ஆணையாளரும் உரிமம் வழங்கும் அதிகாரிகள் ஆவர்.

**அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு**

காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடி கட்டுப்பாட்டின் கீழ், குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவு இயங்கி வருகிறது. காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநருக்கு உதவி செய்யும் பொருட்டு மாநில அளவில் ஒரு காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் தற்போது சென்னை (2), புனித தோமையார் மலை (1), வேலூர் (1), சேலம் (1), கோயம்புத்தூர் (1), திருச்சி (1), கடலூர் (1), மதுரை (1), திண்டுக்கல் (1), விருதுநகர் (1) மற்றும் திருநெல்வேலி (1) ஆகிய பன்னிரண்டு இடங்களில் வீடியோ திருட்டு தடுப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. 1957–ம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம் மற்றும் 2000–ம் ஆண்டு தகவல் தொழில் நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான சட்ட விதி மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவினால் 2010–ம் ஆண்டு முதல் 2020 (20.02.2020) ம் ஆண்டு வரை பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, அவ்வழக்குகளில் கைது

செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் மதிப்பு முதலிய விவரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன :–

**அறிவு சார் சொத்துரிமை அமலாக்கப் பிரிவால் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் குறித்த விபரம் (2010 முதல் 2020 (20.02.2020 வரை)**

| ஆண்டு | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | கைது செய்யப்பட்ட குற்றவாளிகளின் எண்ணிக்கை | கைப்பற்றப்பட்ட சொத்தின் மதிப்பு (ரூ) | கேபிள் தொலைக்காட்சி நடத்துபவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2010 | 2690 | 2664 | 14,38,31,530 | 34 |
| 2011 | 2665 | 2648 | 10,78,74,745 | 9 |
| 2012 | 2858 | 2838 | 14,36,05,175 | 2 |
| 2013 | 3020 | 3004 | 36,57,57,107 | 2 |
| 2014 | 3320 | 3320 | 17,75,02,306 | 29 |
| 2015 | 3406 | 3406 | 11,65,23,631 | 51 |
| 2016 | 4893 | 4906 | 26,14,13,385 | 21 |
| 2017 | 5589 | 5591 | 51,24,96,880 | 13 |
| 2018 | 3102 | 3076 | 8,85,28,841 | 29 |
| 2019 | 762 | 710 | 3,37,19,738 | 18 |
| 2020 (20.02.20 வரை) | 56 | 52 | 8,90,568 | 1 |

இது தவிர, வீடியோ திருட்டில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர்கள் தடுப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1982) கீழும் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. வீடியோ திருட்டு சம்பந்தமான குற்றங்களுக்காக, 2019–2020ஆம் ஆண்டில் (20.02.2020 வரை) குற்றவாளிகள் எவரும் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை.

## தமிழரசு

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் “தமிழரசு” இதழ், தமிழ்நாடு அரசின் திட்டங்கள், மக்கள் நலப்பணிகள், நலத்திட்ட செயல்பாடுகள், சாதனைகள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவற்றை மக்களிடம் கொண்டு சேர்க்கும் அச்சு ஊடகமாக திகழ்ந்து வருகிறது. “தமிழரசு இதழ்” தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் மாதந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

அரசின் பயனுள்ள பல தகவல்களை வாசகர்களுக்கும், பொதுமக்களுக்கும் தமிழரசு இதழ் அளித்து வருகிறது. மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்களின் உரைத் தொகுப்புகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்புகள், அனைத்துத் துறைகளின் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள், அனைத்துத் துறைச் சார்ந்த அறிவிப்புகள், மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்த விரிவான கட்டுரைகள், மாநிலம் முழுவதிலும் அரசு நலத் திட்டங்களால் பயன்பெற்ற பயனாளிகளின் நேர்காணல்கள் உள்ளிட்ட வெற்றிக்கதைகள் ஆகியவை அனைத்துத் தரப்பினரும் படித்துப் பயனடைந்திடும் வகையில் தமிழரசு இதழில் வெளியிடப்படுகின்றன.

தமிழரசு தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களின் பிரதி விலை 20/– ரூபாயாகவும், ஆண்டு சந்தா ஒவ்வொன்றிற்கும் 240/– ரூபாயாகவும், ஆயுள் சந்தா தமிழ் (10 ஆண்டுகள்) 2,000 ரூபாயாகவும், ஆங்கிலம் (10 ஆண்டுகள்) 2,400 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழரசு மாத இதழ்களை பெற்றுக்கொள்ள www.tamilarasu.org என்ற இணையதளம் மூலமாக சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

## சிறப்பு வெளியீடுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முக்கிய நிகழ்ச்சிகளில் ஆற்றிய தமிழ் மற்றும் ஆங்கில உரைகள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் அவ்வப்பொழுது வெளியிடப்பட்டு, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் வாயிலாகப் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இதரப் பிரிவுகளுக்குரிய விண்ணப்பங்கள் மற்றும் படிவங்கள் போன்றவையும் இங்கு அச்சிடப்படுகின்றன.

## மடிப்பேடுகள்

அனைத்து மாவட்ட நினைவகங்களுக்குத் “தமிழரசு” சார்பில் கடந்த **2011**ஆம் ஆண்டு மே திங்கள் தொடங்கி, நாளதுவரை பல்வேறு தலைவர்கள், தியாகிகள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் மடிப்பேடுகளாக அச்சடிக்கப்பட்டு, அந்தந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

## “முத்திரை பதித்த மூன்றாண்டு, முதலிடமே அதற்குச் சான்று” மூன்றாண்டு சிறப்பு மலர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் தன்னிகரற்ற தலைமையில் மூன்றாண்டு சிறப்புடன் நல்லாட்சியை நிறைவு செய்தமைக்கான சிறப்பு மலர்கள் இத்துறையின் சார்பாக அச்சிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் **17.02.2020** அன்று நடைபெற்ற மூன்றாண்டு சாதனை விழாவில் வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வெளியீடுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | தலைப்பு |
|---|---|
| 1 | "முத்திரை பதித்த மூன்றாண்டு, முதலிடமே அதற்குச் சான்று" – தமிழ் பதிப்பு |
| 2 | STERLING THREE YEARS' PERFORMANCE TESTIFIED BY NUMBER ONE POSITION - ஆங்கில பதிப்பு |
| 3 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் – தொகுப்பு–1 |
| 4 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் – தொகுப்பு–2 |
| 5 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சட்டப்பேரவையில் ஆற்றிய உரைகள் |
| 6 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் நிகழ்த்திய உரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட முத்தான கருத்துரைகள் |
| 7 | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள் |
| 8 | மூன்றாண்டு சாதனைகள்– மாவட்டம் வாரியாக (32 மாவட்டங்கள்) |

# பொருட்காட்சிப் பிரிவு

தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்கள், சாதனைகள் மற்றும் செயல்பாடுகளை அனைத்துத்தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் மாவட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஆறு மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுதோறும் ஏனைய மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், 4 மாவட்டங்களில் சுழற்சி முறையிலும் மொத்தம் 10 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

அதனடிப்படையில் கடந்த ஒன்பது ஆண்டுகளில் (மார்ச் 2011 முதல் பிப்ரவரி 2020 வரை) 80 அரசுப் பொருட்காட்சிகளின் மூலம் 14 கோடியே 5 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் அரசிற்கு நிகர வருவாயாக ஈட்டப்பட்டுள்ளது.

## தனியார் பொருட்காட்சிகள்

வரைமுறைகளின்றி, முற்றிலும் வணிக நோக்குடன், தனியாரால் நடத்தப்பட்டு வந்த பொருட்காட்சிகள், முழுமையாக ஒழுங்குபடுத்தப்பட்டு, பொதுமக்களின் நன்மைக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் பயன்படும் வகையில் உரிய விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போது மாவட்டங்களில், தனியார் பொருட்காட்சி நடத்துபவர்களிடம், சமீபத்திய மூன்றாண்டுகளுக்கு வருமான வரி செலுத்திய விபரங்கள்,

முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அரசு நிர்ணயித்த தொகை போன்றவைகளை வழங்கச் செய்து, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவரின் முறையான பரிந்துரையின் அடிப்படையில், தனியார் பொருட்காட்சிகளுக்கு செய்தி மக்கள் தொடர்புத் துறையால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றன.

## புதுடெல்லி மலர்ப்பேரணி

தேசிய ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் மலர்ப்பேரணி விழாவில், தமிழ்நாடு அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத் துறை கடந்த 9 ஆண்டுகளில் தொடர்ந்து பங்கேற்று, சிறப்பாக மலர் சாமரங்களைத் தயாரித்ததற்கும், கலை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியதற்கும் தொடர்ந்து முதல் பரிசு பெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## குடியரசு நாள் விழா அலங்கார ஊர்திகள்

புதுடெல்லியில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் தமிழக அரசின் சார்பில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று, அந்தந்த வருடங்களில் வழங்கப்படும் கருப்பொருளுக்கு ஏற்ப அலங்கார ஊர்திகளை வடிவமைத்தும், தேர்ச்சி பெற்ற கலைஞர்களைக் கொண்டு கலைநிகழ்ச்சிகள் நடத்தியும் அனைவரின் பாராட்டுதல்களைப் பெற்று தமிழகத்திற்குப் பெருமையைச் சேர்த்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சென்னையில் நடைபெறும் குடியரசு தின விழாவில், தமிழக அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் சாதனைகளை வெளிப்படுத்தும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தனி அலங்கார ஊர்தி அமைப்பதுடன், அரசின் பல துறைகளின் சார்பில் வடிவமைக்கப்படும் அலங்கார ஊர்திகளின் வடிவமைப்புகள் மற்றும் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொள்வதும் இத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாகும்.

**அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தகப் பொருட்காட்சி**

ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் நடைபெறும், அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், செய்தி மக்கள் தொடர்புத்துறை பங்கேற்று அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் எளிதில் அறிந்திடும் வகையிலும், விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்ற வகையிலும், தனி அரங்கு அமைத்து பாராட்டுதல்களை பெற்று வருகிறது.

**புதுடெல்லி பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி**

புதுடெல்லியில், ஆண்டுதோறும் நடைபெறும் அகில இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரசு சார்பில் செய்தி மக்கள் தொடர்புத்துறை ஒவ்வொரு ஆண்டும் பங்கேற்று, தமிழக அரசின் பல்வேறு துறைகள் தொடர்பான சாதனைகள், திட்டப்பணிகள், கொள்கை விளக்கங்கள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் குறித்த விளக்கப் புகைப்படங்கள் மற்றும் காட்சிப் பொருட்களை, காண்போரைக்

கவரும் வகையில் அமைத்து, அனைத்துத் தரப்பு மக்களும் அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் மற்றும் சிறப்புகளை அறிந்துகொள்ளவும், பயனாளிகள் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகளை அறியும் வகையிலும் அரங்குகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அமைத்து வருகிறது.

ஏனைய மாநிலங்கள், நம் மாநில அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை அறிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக, அகில இந்திய அளவில் நடைபெறும் விதமாக இப்பொருட்காட்சி அமைந்துள்ளது. மேலும், நம் மாநில மகளிர் சுய உதவிக் குழுக்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களை விற்பனை செய்ய, நாடு தழுவிய அளவில் வணிக வாய்ப்பு அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

**ஒன்றியங்களில் கண்காட்சிகள்**

தமிழ்நாடு அரசின் நலத்திட்டங்கள், சாதனைகள் குறித்துப் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், தமிழ்நாட்டில் சென்னை மாவட்டத்தைத் தவிர்த்து, பிற மாவட்டங்களில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் அரசின் சாதனைகளை விளக்கும் வகையில், சிறு கண்காட்சியினை நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, ஊராட்சி ஒன்றியத்திற்கு ரூபாய் 10,000/– வீதம், மொத்தம் ரூபாய் 38.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011–2012ஆம் நிதி ஆண்டிலிருந்து மாவட்டங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் சிறு கண்காட்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

**சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சி**

தமிழ்நாடு அரசின் சாதனைகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில், சென்னை மாவட்டம் உட்பட, அனைத்து மாவட்டங்களிலும் ஆண்டிற்கு ஒருமுறை அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சி நடத்த, தமிழக அரசு ஆணையிட்டவாறு, மாவட்டம் ஒன்றிற்கு தலா ரூ.10,000/– வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2011–2012ஆம் நிதி ஆண்டு முதல் அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

**திருவிழாக்களில் சிறப்பு புகைப்படக் கண்காட்சி**

மாவட்டங்கள்தோறும் திருவிழாக்கள் மற்றும் அரசு விழாக்களில் அரசின் சாதனைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்துப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புகைப்படக் கண்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்புகைப்படக் கண்காட்சிகளின் மூலம் அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை அனைத்துத் தரப்பு மக்களும் அறிந்து பயன்பெறுவதற்கு ஒரு நல்வாய்ப்பாக உள்ளது.

**அரசு பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம் ரூ.5,000/– ஆக உயர்வு**

நலிந்த கலைஞர்களின் வாழ்க்கை வளம்பெறும் வகையில் அரசுப் பொருட்காட்சிகளில் நடத்தப்படும் விழிப்புணர்வு நாடகங்களுக்கான மதிப்பூதியம் ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டு, வழங்கப்பட்டு வருகிறது.

## மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்களும் அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், செயலாக்கங்கள், சாதனைகள் மற்றும் புதிய அறிவிப்புகளை பயனாளிகளான பொது மக்களுக்கு, மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் மாவட்ட நாளிதழ்கள், தொலைக்காட்சி, வானொலி போன்ற ஊடகங்கள் வழியாக விளம்பரப்படுத்தும் கள விளம்பரப் பணியை செம்மையுறச் செயல்படுத்துகின்றன.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள், உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (செய்தி), உதவி மக்கள் தொடர்பு அலுவலர்கள் (விளம்பரம்) மற்றும் தேவையான ஊழியர் கட்டமைப்புடன் இயங்கி வரும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகங்கள் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் இன்றியமையாத அங்கம் ஆகும். அரசினால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத்திட்டங்கள், அரசின் சாதனைகள், புதிய அறிவிப்புகள் ஆகியவற்றை உடனுக்குடன் மக்களுக்குக் கொண்டு செல்லும் பணியை, சிறப்பாக மேற்கொண்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கும் அரசு விழாக்களுக்கான முன்னேற்பாடு, ஊடகங்களுக்கு அரசின் செய்தி வெளியீடுகள் மற்றும்

புகைப்படங்களை வழங்குதல், மக்கள் கூடும் இடங்களில் வீடியோ படக்காட்சிகள் நடத்துதல், பத்திரிகையாளர் கூட்டங்களை ஏற்பாடு செய்தல், கேபிள் தொலைக்காட்சிகள் மூலம் விளம்பரப்பணி செய்தல், அரசு விழாக்களை நடத்துதல், பல்துறைப் பணிவிளக்க முகாம்கள் மற்றும் சிறு கண்காட்சிகள் நடத்துதல், நினைவகங்களை பராமரித்தல் போன்ற முக்கியப் பணிகளை செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் செய்து வருகிறார்கள்.

## செய்தி நிலையங்கள்

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் மற்றும் புதுடெல்லி ஆகிய இடங்களில் செய்தி நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

செய்தி நிலையங்களில் மொழி, இலக்கியம், வரலாறு, அறிவியல் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் காலமுறை இதழ்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன. மேலும், இச்செய்தி நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவியர் பயன்படுத்திப் பயனடைந்து வருகிறார்கள்.

## சென்னை – மாநில செய்தி நிலையம்

செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கட்டுப்பாட்டில், சென்னை கலைவாணர் அரங்க வளாகத்தில் மாநில செய்தி நிலையம் இயங்கி வருகிறது.

மாநில செய்தி நிலையம், தினமும் காலை 10.00 மணி முதல் 5.45 மணி வரை நூலகத்துடன் செயல்பட்டு வருகிறது. இங்கு தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு, வரலாறு, கவிதை, தமிழ் இலக்கிய வரலாறு, தன்னம்பிக்கை, உளவியல், கல்வியியல் கல்லூரி பாடநூல்கள், ஆராய்ச்சி நூல்கள், அரசியல், அறிவியல், சட்டம், மருத்துவம், பொறியியல், ஆய்வுக்கட்டுரைகள், ஆன்மிகம், சிறுவர் நூல்கள், ஆங்கில நூல்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் சுமார் 61,469 நூல்கள் உள்ளன. பொதுமக்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சமூக ஆர்வலர்கள், மாணவ, மாணவியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை மாநில செய்தி நிலையத்தில் உள்ள நூல்கள் பயன்படுகின்றன.

மேலும், தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்கள், காலமுறை இதழ்கள் மற்றும் வார இதழ்கள் போன்றவை பொதுமக்கள் பயன்பெறுவதற்காக வைக்கப்பட்டுள்ளன. சட்டமன்றப் பேரவை நடவடிக்கை தொடர்பான குறிப்புகள், பேரவை வெளியீடுகள் ஆகியவை தொகுக்கப்பெற்று சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு அரசின் மேற்கோள் பணிக்காக அவ்வப்போது தேவைப்படும் நூல்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரின் கல்விக்குத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மற்றும்

பள்ளியில் நடத்தப்படும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, வினாடி வினா போன்ற பல்வேறு போட்டிகளில் பங்கேற்றிடத் தேவையான குறிப்புகள் எடுக்கவும் மாநில செய்தி நிலையத்தின் நூலகத்திற்குப் பெருமளவில் வருகை புரிகின்றனர். மேலும், போட்டித்தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்களின் பயன்பாட்டிற்காக பல்வேறு வகை போட்டித் தேர்வு நூல்கள் உள்ளன.

அரசின் பல்வேறு துறைகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் பயன்பாட்டிற்காக இரண்டு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இதழ்களும், காலமுறை வெளியீடுகளும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழரசு இதழுக்கு குறிப்பு எடுத்துக்கொள்ளத் தேவையான நூல்களும் தகவல்களும் மாநில செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்படுகின்றன.

**மேம்படுத்தப்பட்ட நவீன நூலகம் :**

இங்கு வருகை தரும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் பொதுமக்களுக்குப் பெரிதும் உதவிடும் வகையில் நூல்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன. 2018–2019ஆம் நிதியாண்டில் 3.60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நகல் எடுக்கும் இயந்திரம், புத்தக அலமாரி உள்ளிட்ட வசதிகளுடன் நூலகத்திலுள்ள புத்தகங்களைக் கணினியில் பதிவு செய்து விரைவாகவும், எளிதாகவும் தேடி எடுத்திடும் வகையில், நவீன மென்பொருளுடன் கூடிய இணையதள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவு :**

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை அவர்கள் பத்திரிகைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம் 1867ன்படி, புத்தகப் பதிவாளராகச் செயல்பட்டு வருவதன் அடிப்படையில், பல்வேறு பதிப்பகங்களின் வாயிலாக வெளியிடப்படும் புத்தகங்களின் இரண்டு பிரதிகள் பெறப்பட்டு முறையாகப் பதிவு செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

# நிறைவுரை

> **"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
> **ஊக்க முடையா னுழை"**
>
> **– (குறள்–594)**

சோர்வு இல்லாத ஊக்கத்தை தனக்கெனக் கொண்டு செயலாற்றுபவரிடத்தில் ஆக்கமானது அதுவாகவே வழி கேட்டுக் கொண்டு, அவர் உள்ள இடத்திற்கும் போய்ச் சேரும் எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஒப்ப, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள்**, சோர்வில்லாத ஊக்கத்துடன் மக்கள் பணியாற்றி அரசுத் துறைகளை செம்மையுடன் வழி நடத்தி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெயருக்கு பெருமை சேர்த்து வருகிறார்கள்.

எந்த வகையிலும், எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தமிழக மக்கள் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை, அதற்காக பணியாற்றுவதே தங்களது முதற்கடமை என்று பணி செய்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான அம்மா அவர்களது அரசின் ஆக்கப்பூர்வமான திட்டங்களை தமிழக மக்களிடம் கொண்டு சேர்க்கின்ற அரும் பணியை, செய்தி மக்கள் தொடர்புத் துறை எந்தத் தொய்வுமின்றி தொடர்ந்து முன்னிலும் வேகமாக முனைந்து செயல்பட்டு வருகிறது.

**கடம்பூர் ராஜு**
செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்

# இணைப்பு

## வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2020-2021

தொகை
(ரூபாய் ஆயிரத்தில்)

| | | 2018-2019 கணக்குகள் | 2019-2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2019-2020 திருத்த மதிப்பீடு | 2020-2021 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2059 | பொதுப் பணிகள் | 60,29 | 65,00 | 65,00 | 68,25 |
| 2220 | செய்தி மற்றும் விளம்பரம் | 102,08,67 | 89,34,45 | 111,61,06 | 96,34,31 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 1,66,03 | 1,56,00 | 1,57,20 | 1,57,20 |
| 2250 | ஏனைய சமூகப்பணிகள் | 11,05 | 19,09 | 14,41 | 14,96 |
| 4202 | கல்வி, போட்டி விளையாட்டு, கலை, பண்பாடு குறித்த மூலதனச் செலவு | ——— | 1 | 1 | 1 |
| | **மொத்தம்** | **104,46,04** | **91,74,55** | **113,97,68** | **98,74,73** |





**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**

# திரு. எடப்பாடி K. பழனிசாமி

**அவர்களின் சீரிய தலைமையில்**

## மாண்புமிகு அம்மா அரசின்

## " முத்திரை பதித்த மூன்றாண்டு முதலிடமே அதற்குச் சான்று "

எனக்குப் பின்னாலும், இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் வந்தாலும், இந்த ஆட்சியும் இயக்கமும் மக்களுக்காகவே பணியாற்றும்.
**புரட்சித்தலைவி**
**செல்வி ஜெ ஜெயலலிதா**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றாண்டில் 16,382 கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்ததன் மூலம் எண்ணிலடங்கா மக்கள் நலப் பணிகள்

நாங்கள் தமிழக மக்களுக்கு நல்லவற்றை மட்டுமே செய்து வந்திருக்கிறோம். மக்கள் மனதில் எங்களை மட்டுமே நிறுத்தியிருக்கிறார்கள்.
**எடப்பாடி K. பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

- மத்திய அரசின் நல் ஆளுமைத் திறனுக்கான தரவரிசையில் தமிழ்நாடு முதலிடம்
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வெளிநாடு பயணம் மூலம் ரூ.8,835 கோடி முதலீடுகள் ஈர்ப்பு
- தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட சிறப்பு வேளாண் மண்டலமாக அறிவிப்பு
- 11 மாவட்டங்களில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள்
- நிர்வாக வசதிக்காக 5 புதிய மாவட்டங்கள் உருவாக்கம்
- 2.05 கோடி குடும்பங்களுக்கு பொங்கல் பரிசுடன் ரூபாய் 1,000

### பொதுப்பணித்துறை

- ரூ.11,250 கோடியில் காவேரி மற்றும் அதன் கிளை ஆறுகள் மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க "நடந்தாய் வாழி காவேரி" திட்டம்
- ரூ.1,652 கோடியில் அத்திக்கடவு அவிநாசி நீர்ப்பாசனம் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் (ம) குடிநீர் வழங்கும் திட்டம்
- **தமிழ்நாடு நீர்வள ஆதாரங்கள் பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் (மக்கள் இயக்கமாக) துவக்கம்**
- ரூ.930.25 கோடியில் 4,865 குடிமராமத்துப் பணிகள்
- **ரூ.494.60 கோடியில் ஆதனூர்–குமாரமங்கலத்தில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே கதவணை**
- ரூ.803.49 கோடியில் அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டம்
- **ரூ.168.57 கோடியில் தூண்டில் வளைவுகள் மற்றும் கடலோர தடுப்புச் சுவர்கள்**
- ரூ.565 கோடியில் மேட்டூர் அணை – சரபங்கா வடிநில நீரேற்றுத் திட்டம்
- **ரூ.2,962 கோடியில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம்**

### நெடுஞ்சாலைகள் (ம) சிறு துறைமுகங்கள் துறை

- **ரூ.22,096 கோடியில் 21,109 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகள் மேம்பாடு. மேலும், 8,524 கி.மீ. சாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 447 சிறு பாலங்கள், 247 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன**
- ரூ.12,301 கோடியில் எண்ணூர் துறைமுகம் – மாமல்லபுரம் பூஞ்சேரி சந்திப்பு சாலைப் பணிகள்
- **ரூ.6,448 கோடியில் சென்னை – கன்னியாகுமரி தொழிற்தட சாலைப் பணிகள்**

### சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை

- மாணவர்களுக்கு 2018–19 ஆம் ஆண்டு முதல் 11ஆம் வகுப்பிலேயே மடிக்கணினி
- **ரூ.2,183.55 கோடியில் மாணாக்கர்களுக்கு 17.72 லட்சம் விலையில்லா மடிக்கணினிகள்**

### தகவல் தொழில்நுட்பவியல் துறை

- ரூ.1,815.31 கோடி மதிப்பீட்டில் அதிவேக அகண்ட அலைவரிசை இணையதள சேவைக்கான பாரத் நெட் திட்டம்
- **தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் சேவை வாயிலாக 64.35 லட்சம் நபர்கள் பயன்**

### தமிழ்நாடு அரசு பெற்ற விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள்

- ஒட்டுமொத்த செயல் திறன்மிக்க முதன்மை மாநிலமாக இந்தியா டுடே ஆய்வில் இரண்டாவது முறையாக தமிழ்நாடு தேர்வு
- **கிருஷி கர்மான் விருதினை 5 முறை பெற்று சாதனை**
- உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து 5 வருடங்களாக மிகச் சிறந்த மாநிலத்திற்கான விருது
- **ஊராட்சிகளில் மின் ஆளுமை, வலிமைப்படுத்துதல், குழந்தைகள் நேயம், வலுவான கிராம சபை செயல்பாட்டிற்கென 12 தேசிய விருதுகள்**
- பெங்களூருவில் உள்ள 'பொது விவகாரங்கள் மையத்தின்' அறிக்கையில் நல் ஆளுமையில் இரண்டாவது சிறந்த மாநிலமாக தேர்வு
- **ஃபிராஸ்ட் அண்ட் சல்லிவன் (Frost & Sullivan) நிறுவன ஆய்வறிக்கையில் ஒட்டு மொத்த செயல்பாட்டில் இரண்டாம் இடத்தை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக தமிழ்நாடு பெற்றுள்ளது**
- தாய்மார்கள் இறப்பு விகிதத்தை வெகுவாக குறைத்ததற்காக மத்திய அரசின் விருது
- **"பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்" திட்டத்திற்காக மத்திய அரசின் விருது**
- தூய்மை பாரத திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சிறந்த மாநில விருது
- **பொது விநியோக திட்டத்தை கணினிமயமாக்கியமைக்கு விருது**
- ஊரக வளர்ச்சித்துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக 9 தேசிய விருதுகள்
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 4 தேசிய விருதுகள்**
- மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக கடனுதவி வழங்கிய தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு தேசிய விருது
- **இணைய வழி கற்றலில் முன்னோடி மாநிலத்திற்கான தேசிய விருது**
- மூத்த குடிமக்கள் சேவைக்காக தேசிய விருது
- **உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணைய விருது**
- சென்னை அரசு பொது மருத்துவமனைக்கு உடல் உறுப்பு தானத்திற்கான சிறப்பு விருது
- **புதுப்பிக்கப்பட்ட எரிசக்தித்துறைக்கு விருது**
- சாலை பாதுகாப்பில் சிறந்த செயல்பாட்டிற்காக மத்திய அரசின் விருது
- **போக்குவரத்து கழகங்களின் சிறந்த செயல்பாட்டுத் திறனுக்காக 9 விருதுகள்**
- உயர் கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதன்மை மாநிலம்
- **பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையத்திற்கு தென் மண்டலத்திற்கான தேசிய காமதேனு விருது**
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு முதுநிலை விருது
- **தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் தரவரிசையில் இந்தியாவிலேயே முதலிடம்**
- சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்கு "சிறந்த மேலாண்மைக்கான" மத்திய அரசின் விருது
- **2018ம் ஆண்டிற்கு மத்திய அரசின் தேசிய நீர் ஆதார விருது**
- 2018ம் ஆண்டிற்கு மத்திய அரசின் தூய்மையான நகரத்திற்கான சுவச் சர்வக்ஷன் விருது
- **மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் "தூய்மையான புனித தலம்" விருது**
- பழமை மாறாமல் திருப்பணி மேற்கொண்டதற்காக ஸ்ரீரங்கம், அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு யுனஸ்கோ விருது

### நிதித்துறை

- **ரூ.331.36 கோடியில் ஓய்வூதிய தாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 94,981 பேர் பயன். இத்திட்டம் நான்கு ஆண்டுகளுக்கு நீட்டிப்பு**

### சட்டத்துறை

- விழுப்புரம், தருமபுரி, இராமநாதபுரம், சேலம், நாமக்கல் மற்றும் தேனி மாவட்டங்களில் புதிய அரசு சட்டக் கல்லூரிகள்
- **ரூ.458.67 கோடி செலவில் சட்டக் கல்லூரிகளுக்கு புதிய கட்டடங்கள் (ம) கட்டமைப்பு வசதிகள்**

### கூட்டுறவு மற்றும் உணவுத்துறை

- 34,07,954 விவசாயிகளுக்கு ரூ.22,031.69 கோடி பயிர்க் கடன்
- **பயிர்க்கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தியமைக்கு ரூ.303.71 கோடி வட்டி ஊக்கத்தொகை**

### வணிகவரி மற்றும் பதிவுத்துறை

- எளிமையான மற்றும் வெளிப்படையான பதிவு நிர்வாகத்திற்கு ஸ்டார் 2.0 (Simplified and Transparent Administration of Registration) திட்டம் துவக்கம்
- **மூன்றாண்டுகளில் 65,02,906 ஆவணங்கள் பதிவு**

### உள்துறை

- 28,312 சீருடைப் பணியாளர்கள் நியமனம்
- **மகளிர் பாதுகாப்பிற்கு "காவலன் செயலி"**
- மாநிலம் முழுவதும் 3,28,688 சி.சி.டிவி கேமராக்கள் மூலம் கண்காணிப்பு
- **ரூ.838 கோடியில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள்**
- தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையில் 68,710 தீ விபத்து அழைப்புகள் பெறப்பட்டு, 213 உயிர்கள் மற்றும் ரூ.916.69 கோடி சொத்துக்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. மேலும் 73,414 பல்வேறு மீட்பு அழைப்புகள் பெறப்பட்டு, 12,502 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன

### வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை

- **ரூ.22,367 கோடியில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தில் 4,44,203 அடுக்குமாடி குடியிருப்புகள்/வீடுகள்.**
- நகர குடிசைப் பகுதியில் 1,25,390 அடுக்குமாடி குடியிருப்புகள்/வீடுகள்
- **ரூ.2,117.55 கோடியில் 33 திட்டப் பகுதிகளில் 9,535 குடியிருப்புகள் / வீடுகள்**
- 22,669 மனைப்பிரிவுகள் மற்றும் 17,00,906 மனைகள் வரன்முறை
- **சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து குழுமச் சட்டம் (CUMTA) மற்றும் சட்ட விதிகள் 2019 அறிவிக்கை**

### தொழில் துறை

- உலக முதலீட்டாளர்கள் மாநாடு மூலம் ரூ.3,00,501 கோடி அளவிலான முதலீடுகள் ஈர்ப்பு. 10.5 லட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம்
- **முதலமைச்சர் அவர்களின் வெளிநாடு பயணத்தில் 41 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.8,835 கோடி முதலீடுகள் ஈர்ப்பு. 35,520 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கம்**
- 2019 – உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு பிறகு 22 ஒப்பந்தங்கள் மூலம் ரூ.10,301 கோடி முதலீடுகள் ஈர்ப்பு. 48,317 நபர்களுக்கு வேலைவாய்ப்பு
- **தமிழ்நாடு வானூர்தி மற்றும் பாதுகாப்புத் தொழில் கொள்கை 2019 வெளியீடு**
- 25 பெருந்தொழில் நிறுவனங்களுக்கு ரூ. 5,324.50 கோடி ஊக்க நிதியுதவி
- **தமிழ்நாடு மின்சார வாகன கொள்கை 2019 வெளியீடு**

செ.ம.தொ.இ / 243 / வரைகலை / 2020

## இது மக்கள் நல அரசு - மக்களுக்கான அரசு

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை

# " முத்திரை பதித்த மூன்றாண்டு முதலிடமே அதற்குச் சான்று "

## கால்நடை பராமரிப்பு, பால்வளம் (ம) மீன்வளத்துறை

- ரூ.1,022.26 கோடியில் சேலம் மாவட்டம் தலைவாசல் பகுதியில் 1,102.25 ஏக்கரில் சர்வதேச தரத்தில் நவீன கால்நடை பூங்கா
- **ரூ.199.33 கோடியில் 37,780 நபர்களுக்கு விலையில்லா கறவைப் பசுக்கள்**
- ரூ.728.75 கோடியில் 4,49,869 நபர்களுக்கு விலையில்லா ஆடுகள்
- **மீன்பிடி தடைகால நிவாரணம் ரூ.5,000 ஆக உயர்வு 4,79,674 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.239.84 கோடி நிவாரணம்**
- மீன்பிடிப்பு குறைந்த காலத்திற்கு நிவாரண உதவி ரூ.5,000. 5,03,590 மீனவக் குடும்பங்களுக்கு ரூ.251.80 கோடி நிவாரணம்
- **ஆழ்கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு வானிலை எச்சரிக்கை தகவல்களை வழங்க Satellite Phone, NAVIC மற்றும் NAVTEX என்ற தொலை தொடர்பு கருவிகள்**
- ரூ.60.43 கோடியில் மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கும் கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள்
- **தமிழக மீனவர்களின் 92 மீன்பிடி படகுகள் இலங்கை அரசிடமிருந்து மீட்பு**
- இலங்கை, ஈரான், கத்தார், அபுதாபி மற்றும் ஓமன் ஆகிய நாடுகளின் சிறைகளிலிருந்து தமிழகத்தைச் சேர்ந்த 932 மீனவர்கள் மீட்பு

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

- **தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.4,000 கோடியில் 19,180 கி.மீ. சாலைப் பணிகள்**
- பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ் ரூ.2,066 கோடியில் 3,947 கி.மீ. நீளத்தில் 1340 சாலைகள் மற்றும் 61 பாலங்கள்
- **மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 85.15 கோடி மனித சக்தி நாட்கள் உருவாக்கப்பட்டு ரூ.15,343.69 கோடி ஊதியம்**
- 8,31,079 மகளிர் சுய உதவிக் குழுக்கள், 108 ஊராட்சி கூட்டமைப்புகளுக்கும் ரூ.31,030.68 கோடி பெருங்கடன் இணைப்பு நிதியுதவி
- **சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 20,092 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 583.75 கோடி நிதியுதவி**

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை

- புதியதாக 5 மாவட்டங்கள், 7 கோட்டங்கள், 25 வட்டங்கள், ஒரு குறுவட்டம் மற்றும் 6 வருவாய் கிராமங்கள் உருவாக்கம்
- **முதலமைச்சரின் சிறப்பு குறை தீர்க்கும் திட்டத்தின் மூலம் 5,22,660 மனுக்கள் மீது சாதகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது**
- இ–அடங்கல் செயலி தொடக்கம்
- **சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 31,40,322 பயனாளிகளுக்கு ஓய்வூதியம்**
- ரூ.406.83 கோடியில் வேளாங்கண்ணி மற்றும் கடலூர் நகராட்சிகளில் மின் இணைப்புகள் பூமிக்கு கீழான இணைப்புகளாக மாற்றம்
- **முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 8,80,993 விவசாயிகளுக்கு ரூ.681.55 கோடி நிவாரணம்**

## எரிசக்தித்துறை

- கூடுதலாக 2,594 மெகாவாட் கூடுதல் மின் நிறுவு திறன் தமிழக மின் கட்டமைப்புடன் இணைப்பு. மொத்த மின் நிறுவு திறன் 31,416 மெகாவாட் ஆகும்.
- **காற்றாலை மின் உற்பத்தி திறன் 8,503 மெகாவாட். சூரிய மின் சக்தி நிறுவு திறன் 3,827 மெகாவாட்**
- 257 துணை மின் நிலையங்கள், 4,333 சுற்று கி.மீ. மிக உயர் மின் அழுத்த பாதைகள், 9,875 கி.மீ. உயரழுத்த மின் பாதைகள், 21,211 கி.மீ. தாழ்வழுத்த மின்பாதைகள் மற்றும் 40,575 மின்மாற்றிகளும் இயக்கம்

## பள்ளிக்கல்வித்துறை

- **250 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 202 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்வு மற்றும் 20 புதிய தொடக்கப் பள்ளிகள்**
- ரூ.33.60 கோடியில் 120 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உலகத்தரம் வாய்ந்த மாதிரி பள்ளிகளாக மாற்றம்
- **முன் மழலையர் கல்வியை மேம்படுத்த 2,381 நடுநிலைப்பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் துவக்கம்**
- ரூ.5,822.09 கோடியில் விலையில்லா பாடப்புத்தகங்கள், மடிக்கணினி, சீருடை உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள்
- **மாணவ, மாணவியருக்காக 24 மணி நேரமும் செயல்படக்கூடிய கல்வி தொலைக்காட்சி**

## உயர்கல்வித்துறை

- 5,31,349 முதல் தலைமுறை பட்டதாரி மாணாக்கர்களுக்கு ரூ.1,111.78 கோடி கல்வி கட்டண நிதி
- **இராமேஸ்வரத்தில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயரில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்கம்**
- 41 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதற்கட்டமாக 14 கல்லூரிகள் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளாக மாற்றம் செய்யப்பட்டன
- **ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் அரசினர் பொறியியல் கல்லூரிகளில் 188 உதவிப் பேராசிரியர்கள் நியமனம்**

## வேளாண்மைத்துறை

- ஆறு முறை 100 லட்சம் மெட்ரிக் டன்னுக்கு அதிகமாக உணவு தானிய உற்பத்தி
- **நீடித்த நிலையான மானாவாரித் திட்டத்தின் கீழ், 3,746 பண்ணைக் குட்டைகள், 976 தடுப்பணைகள், 96 கிராம/சமுதாயக் குளங்கள் மற்றும் 332 ஊரணிகள் மேம்பாடு**
- 36.44 லட்சம் விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.7,618 கோடி இழப்பீட்டுத் தொகை
- **அமெரிக்கன் படைப்புழு பூச்சி தாக்குதலால் மக்காச்சோளப் பயிரில் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்ய 2,93,424 விவசாயிகளுக்கு ரூ.186.25 கோடி நிவாரணம்**
- ரூ.1,581.57 கோடியில் 3.18 லட்சம் எக்டரில் நுண்ணீர் பாசனத் திட்டம்
- **ரூ.139.73 கோடியில் 23 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் "மின்னணு தேசிய வேளாண் சந்தை" திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பு**
- ரூ.482.36 கோடியில் 10 மாவட்டங்களில் விநியோகத் தொடர் மேலாண்மைத் திட்டம்

## சமூக நலத்துறை

- **ரூ.227.74 கோடியில் அங்கன்வாடி மையங்களுக்கு புதிய கட்டடங்கள், அடிப்படை வசதிகள் மற்றும் உபகரணங்கள்**
- **திருநங்கைகள் சுய தொழில் தொடங்க மானியம் ரூ.20,000 லிருந்து ரூ.50,000 ஆக உயர்வு**
- தொட்டில் குழந்தைத் திட்டத்தின் கீழ் 304 குழந்தைகள் மீட்பு
- **மூத்த குடிமக்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.1,000. இதில் 29.80 லட்சம் முதியோர் பயன்**
- புதிதாக தகுதியான 5 லட்சம் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படும்.
- **தாலிக்கு தங்கம் திட்டத்தின் கீழ் 3,26,895 பயனாளிகளுக்கு 2,595.58 கிலோ தங்கம், ரூ.1,393.76 கோடி ரொக்கம் வழங்கப்பட்டது**

## இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை

- **ரூ.76.23 கோடி நிதியில் 12,524 கிராம ஊராட்சிகள் மற்றும் 528 பேரூராட்சிகளில் "அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம்"**
- அரசுப் பணிக்கான வேலை வாய்ப்பில் திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களுக்கு 3% இட ஒதுக்கீடு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் பணி நியமனம்
- **சர்வதேச மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற விளையாட்டு வீரர்கள் மற்றும் அவர்களது பயிற்சியாளர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை ரூ.27.51 கோடி**

## தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை

- சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், மறைமலையடிகளார், அயோத்திதாசப் பண்டிதர், அருட்பெருஞ்சோதி வள்ளலார், வீரமாமுனிவர், காரைக்கால் அம்மையார், தேவநேயப் பாவாணர் மற்றும் தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் ஆகியோரின் பெயரில் புதியதாக விருதுகள்
- **ரூ.10 கோடி செலவில் ஹார்வர்டு பல்கலைக்கழகத்திலும், ரூ.1 கோடி செலவில் ஹூஸ்டன் பல்கலைக்கழகத்திலும் தமிழ் இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன**
- கடலூரில் இராமசாமி படையாட்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம்
- **தருமபுரி, பாப்பாரப்பட்டியில் பாரதமாதா நினைவாலயம்**
- திருச்செந்தூரில் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்களுக்கு மணிமண்டபம்.
- **மதுரை மாவட்டம், உசிலம்பட்டியில் பிரமலைக் கள்ளர் சமூகத்தைச் சேர்ந்த 16 தியாகிகளுக்கு நினைவு மண்டபம் அமைக்கப்படும்**
- கொடிகாத்த குமரன், விடுதலைப் போரட்ட வீரர் பூலித்தேவன், இராமசாமி படையாட்சியார், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம், சி.பா.ஆதித்தனார், மாவீரன் அழகு முத்துக்கோன், கர்னல் ஜான் பென்னிகுயிக் ஆகியோருக்கு அரசு சார்பில் பிறந்த நாள் விழா மற்றும் காலிங்கராயன் அவர்களின் நினைவாக அரசு விழா

## சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

- **பல்வேறு திட்டங்களின் கீழ் 371 லட்சம் மரக்கன்றுகள் நடவு. வனப்பகுதியின் பரப்பளவு 26,281 ச.கி.மீட்டரிலிருந்து 26,364 ச.கி. மீட்டராக உயர்வு**
- வண்டலூரில் மேம்படுத்தப்பட்ட வன உயிரின ஆராய்ச்சி நிறுவனம்
- **அரசு ரப்பர் கழகத்திற்கு புதிய ஐ.எஸ்.ஓ 9001:2015 தரச்சான்றிதழ்**
- ரூ. 165.68 கோடியில் பள்ளிக்கரணை சதுப்பு நிலங்களில் சுற்றுச்சூழல் மீட்புத் திட்டம்

## மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

- **7,193 பயனாளிகளுக்கு நவீன ஒளிரும் மடக்கு குச்சிகள், 13,546 பயனாளிகளுக்கு காதொலி கருவி, 15,591 மாற்றுத் திறனாளிகளுக்கு உபகரணங்கள்**
- போக்குவரத்து நெரிசல் மிக்க இடங்களில் பார்வையற்றவர்கள் பாதுகாப்பாக சாலையினை கடக்க குரல் ஒலிப்பான் சமிக்ஞைகள்
- **14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பாதுகாக்க 23 மாவட்டங்களில் மனவளர்ச்சிக் குன்றியோருக்கான இல்லங்கள்**
- பார்வையற்ற மற்றும் கை கால் பாதிக்கப்பட்டு அரசு பணிக்கு செல்லும் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் பயணப்படி காது கேளாத மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம். பயணப்படி ரூ.1,000 லிருந்து ரூ.2,500 ஆக உயர்வு
- **7,264 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்**

## கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

- கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் விலையில்லா மின்சாரம் மூலம் 2,23,899 நெசவாளர்கள் பயன்
- **பட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 15,884 விவசாயிகளுக்கு ரூ.64.51 கோடி ஊக்கத்தொகை மற்றும் உபகரணங்கள்**
- மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மழைக்கால பராமரிப்பு உதவித் தொகை ரூ.5,000 ஆக உயர்வு. 24,288 நபர்கள் பயன்

## சுற்றுலா மற்றும் அறநிலையங்கள் துறை

- **ரூ.12.21 கோடியில் கீழடியில் உலகத்தரம் வாய்ந்த அகழ்வைப்பகம்**
- கீழடி அகழாய்வு மூலம் 5,820 அரிய தொல் பொருட்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளது
- **காஞ்சிபுரம், வேளாங்கண்ணி சுற்றுலாத் தலங்களில் மேம்பாட்டுப் பணிகள்**
- ரூ.840.19 கோடி மதிப்பிலான அறநிலையத் துறைக்கு சொந்தமான ஆக்கிரமிப்புகள் மீட்பு
- **ரூ.563.50 கோடியில் மாமல்லபுரம் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை**
- 2,075 கிராமக் கோயில்களுக்கு திருப்பணி
- **இந்து சமய அறநிலையத்துறை கட்டுப் பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதியிலுள்ள 2,601 திருக்கோயில்களுக்கு திருப்பணி நிதியுதவி**

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

- தனியார் துறையுடன் இணைந்து வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 1,90,248 நபர்கள் பணி நியமனம்
- **13,04,133 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு ரூ.598.50 கோடி நிதியுதவி**
- கொத்தடிமை முறையிலிருந்து 914 தொழிலாளர்கள் மீட்பு. ரூ.1.68 கோடி நிவாரண உதவி

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

- **புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 1,721 பயனாளிகளுக்கு ரூ.170.13 கோடி மானியம்**
- வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின் கீழ் 10,928 பயனாளிகளுக்கு ரூ.70.25 கோடி மானியம்

## பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை

- **தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம், 24,510 நபர்கள் பணி நியமனம்**
- ரூ.27.79 கோடியில் தமிழ்நாடு மாநில தகவல் ஆணையத்துக்கென ஒரு ஏக்கர் பரப்பளவில் 5 தளத்தில் புதிய கட்டடம்

## நகராட்சி நிருவாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை

- **ரூ.471.22 கோடியில் மதுரவாயல், நொளம்பூர், சூரப்பட்டு, புத்தகரம், கதிர்வேடு, உள்ளகரம் – புழுதிவாக்கம், கத்திவாக்கம், திருவொற்றியூர், சோழிங்கநல்லூர் மற்றும் காரப்பாக்கம் ஆகிய விரிவாக்கப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்**
- ரூ.1,259.38 கோடியில், நெம்மேலியில் சென்னை குடிநீர் தேவைக்காக கூடுதலாக நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட, கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையம்
- **ரூ.348.17 கோடியில் கொடுங்கையூரிலும், ரூ.486.21 கோடியில் கோயம்பேட்டிலும் எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையிலான மூன்றாம் நிலை சுத்திகரிப்பு நிலையம்**
- ரூ.3,034.13 கோடியில் 25 கூட்டுக் குடிநீர் திட்டங்கள்
- **சீர்மிகு நகரங்கள் திட்டத்தின் கீழ் ரூ.10,345.88 கோடியில் 413 திட்டப் பணிகள்**
- ரூ.1,387.27 கோடியில் வெள்ள பாதிப்பைத் தடுக்க அடையாறு மற்றும் கூவம் ஆற்றில் மழைநீர் வடிகால் கட்டமைப்புகள்
- **கோவளம் வடிநிலப் பகுதியில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் ரூ.1,243.15 கோடியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி**

## போக்குவரத்துத்துறை

- ரூ.5,890 கோடியில் 12,000 புதிய பேருந்துகள் மற்றும் 2,000 புதிய மின்சார பேருந்துகள் வாங்குவதற்கு ஜெர்மன் வளர்ச்சி வங்கியுடன் ஒப்பந்தம்
- **போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு ரூ.4,830.63 கோடி பணப்பலன்கள்**
- 5,161 புதிய பேருந்துகள் மற்றும் முதன்முறையாக தூங்கும் வசதியுடன் கூடிய 36 பேருந்துகள், இருக்கை மற்றும் படுக்கை வசதியுடன் கூடிய 106 குளிர்சாதன சொகுசு பேருந்துகள் இயக்கம்

## ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை

- **கல்லூரி விடுதி மாணவர்களுக்கு ரூ. 1,000 ஆகவும், பள்ளி விடுதி மாணவர்களுக்கு ரூ. 900 ஆகவும் உணவுக் கட்டணம் உயர்வு**
- ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் சாலை, பாதுகாக்கப்பட்ட குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் மேம்படுத்திட ரூ.100 கோடி
- **ரூ.50 கோடியில் பழங்குடியின மக்களின் குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள்**
- முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.50,000 ஊக்கத்தொகை பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 700லிருந்து 1,200ஆக அதிகரிப்பு

## மக்கள் நல்வாழ்வுத்துறை

- **முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் தொகை ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்வு. 21.50 லட்சம் நபர்களுக்கு ரூ.2,873.39 கோடியில் சிகிச்சை**
- ரூ.177.81 கோடியில் 13.13 லட்சம் குழந்தைகளுக்கு அம்மா குழந்தைகள் நல பெட்டகம்
- **அம்மா ஆரோக்கியத் திட்டத்தின் மூலம் 41.05 லட்சம் நபர்கள் பயன்**
- ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவியுடன் ரூ.1,634 கோடியில் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டம்.
- **மதுரை, தஞ்சாவூர் மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரிகளில் தலா ரூ.150 கோடியில் விபத்து சிகிச்சை மையங்களுடன் கூடிய உயர் சிறப்பு மருத்துவமனைகள்**
- ரூ.340.65 கோடியில் 4,146 நபர்களுக்கு சிறப்பு அறுவை சிகிச்சை

## பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை

- **தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் அறநிலைப் பொறுப்பாட்சிகள் (ம) நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமம் உருவாக்கம்**
- பிறமலைக் கள்ளர் உள்ளிட்ட பல்வேறு சீர்மரபினருக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மத்திய மற்றும் மாநில அரசின் பயன்களைப் பெறும் வகையில் அரசாணை வெளியீடு
- **ரூ.12 கோடி மாநில அரசு நிதியுதவியில் 8,166 இஸ்லாமிய பெருமக்கள் ஹஜ் புனிதப் பயணம்**
- ஆண்டுதோறும் ரூ.1.20 கோடி நிதியுதவியில் 600 கிறித்துவர்கள் மற்றும் கன்னியாஸ்திரிகள் ஜெருசலேம் புனிதப் பயணம்
- **16,52,370 மாணவ, மாணவிகளுக்கு ரூ.403.07 கோடி கல்வி உதவித் தொகை**

## திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை

- சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-I 45 கி.மீ. மெட்ரோ இரயில் வழித்தடங்களில் பயணிகள் சேவை தொடக்கம் மற்றும் 118.9 கி.மீ. நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-IIக்கு ரூ.69,180 கோடி ஒப்புதல்
- **இந்திய மாநிலங்களின் நிலையான வளர்ச்சி இலக்கு குறியீடு–2019ல் தமிழ்நாடு மூன்றாம் இடம்**

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை

செ.ம.தொ.இ / 243 / வரைகலை / 2020

**இது மக்கள் நல அரசு - மக்களுக்கான அரசு**



டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபம், தூத்துக்குடி மாவட்டம்